# சுதந்திரன்
SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 2009
புரட்டாதி 15
ஷவ்வால் பிறை 27
ஞாயிறு (1-10-1978)
நிறுவியது 1947
புத்தகம் 32
இதழ் 35

விலை சதம் 60


# குடியேற்றக் கொள்கையை வாபஸ் பெறும்வரை
# ஒத்துழையாமை இயக்கம்?

## தமிழர் விடுதலைக்கூட்டணி ஆலோசனை!

தமிழ் ஈழத்தில் சிங்களவர்களைக் குடியேற்றும் அரசாங்கத்தின் தமிழ்இன ஒழிப்புக்கொள்கைக்கு எதிராக அஹிம்சை அடிப்படையிலான வெகுஜன ஒத்துழையாமை, சட்டமறுப்பு இயக்கங்களை ஆரம்பிப்பது குறித்து தமிழர் விடுதலைக் கூட்டணி இப்போது தீவிரமாக ஆலோசித்து வருகிறது. சிங்களக் குடியேற்றக்கொள்கையை கைவிடுவதாக அரசாங்கம் அறிவிக்கும்வரை ஒத்துழையாமை இயக்கத்தை பல முனைகளிலும் நடத்த வேண்டும் என்ற கருத்து கூட்டணி வட்டாரங்களில் உருவாகி வருகிறது.

அண்மையில் அரசாங்கப் பாராளுமன்றக் குழுக்கூட்டத்தில் ஜனாதிபதி ஜே.ஆர் ஜெயவர்த்தன, வடபகுதியில் சிங்களவர்களையும், தெற்கில் தமிழரையும் குடியேற்றுவதே அரசின் கொள்கையென்றும், இக்கொள்கை செயற்படும்போது தமிழ் ஈழக் கோரிக்கை தானகவே மறைந்து விடுமென்றும் கூறியிருந்தது தெரிந்ததே.


அதாவது, சிங்களவர்களை தமிழ் ஈழப்பிரதேசத்தில் அரசாங்கமே திட்டமிட்டுக் குடியேற்றி, தமிழ் பிரதேசமே இல்லாமற் செய்வதன் மூலம் தமிழினத்தின் தேசிய தனித்தன்மையை(NATION HOOD)யும், சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையையும் அழித்தொழிப்பதே தமது கொள்கையென்று ஜனாதிபதி ஜே.ஆர். திட்டவட்டமாக அறிவித்து விட்டார்.

ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் பிரதேச ஆக்கிரமிப்பு—இன ஒழிப்புக்கொள்கையை எதிர்த்து தமிழர் விடுதலை கூட்டணி எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றி கூட்டணியின் உயர் வட்டாரங்கள் இப்போது சிந்தித்துவருகின்றன. மேற்படி இன ஒழிப்புக்கொள்கையைஅரசு வாபஸ் பெறும்வரை பரந்த அடிப்படையிலான வெகுஜன ஒத்துழையாமை நடத்துவது பற்றியும் கூட்டணி ஆலோசித்து வருவதாகத் தெரிகிறது.

இதற்கிடையில் உலகடங்கிலும் ஜே.ஆரின் இந்தப் பாஸிஸக் கொள்கையை அம்பலப்படுத்தி, சிங்கள ஏகாதிபத்தியத்தின் கொடூர இன ஒழிப்பு நடவடிக்கையைக் கண்டிக்குமாறு உலக நிறுவனங்களுக்கும், சர்வதேசப் பத்திரிகைகளுக்கும் மேற்கு நாடுகளிலுள்ள தமிழ் ஈழ விடுதலை இயக்கங்கள் வேண்டுகோள் விட ஆரம்பித்துள்ளன.

உலகிலுள்ள சோசலிச நாடுகளின் கவனத்துக்கும் ஜே.ஆரின்இந்த இனஒழிப்பு பாஸிஸக் கொள்கையைக் கொண்டு வருவதற்கு செந்தமிழர் இயக்கப்பொதுச் செயலாளர் திரு. வி. பொன்னம்பலம் ஏற்கனவே நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிய வருகிறது.

இதே சமயம் தற்போது அமெரிக்காவிலுள்ள தமிழர் தலைவர் திரு. அமிர்தலிங்கம், ஜே.ஆர். ஜெயவர்த்தன வெளிப்படையாகவே பிரகடனப்படுத்தியுள்ள குடியேற்றக்கொள்கையின் பின்னுலுள்ள பயங்கர இன ஒழிபபு அம்சத்தை ஐ.நா. சபையின் கவனத்துக்கு கொண்டுவரும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.





"HE COMES FROM SOUTH"

## அரசுடன் சேர்ந்தாலே மாவட்ட மந்திரியாகலாம்!

தமிழர் விடுதலைக் கூட்டணியினருக்கு மாவட்ட மந்திரிப்பதவி வழங்கப்பட வேண்டுமானல் அவர்கள் திரு. தொண்டமானைப் போல அரசுடன் சேர்ந்தேயாகவேண்டும் என்று ஜனாதிபதி ஜே.ஆர். நிபந்தனை விதித்துள்ளாராம்!

அப்படித் தமிழர் விடுதலைக் கூட்டணி அரசுடன் சேர்ந்து மாவட்ட மந்திரிப் பதவியேற்க ஒப்புக்கொண்டாலும், அவர்களுக்கு யாழ்ப்பாணத்துக்கும், மன்னருக்குமாக இரண்டே இரண்டு மாவட்ட அமைச்சர் பதவியே கொடுக்கப்படுமாம்;

வவுனியா திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களுக்கு யூ.என்.பி. ஆட்களே நியமிக்கப்படுவார்களாம்.



## இன்று யாழ்ப்பாணத்தில் சாதி ஒழிப்பு மாநாடு

யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் இன்று 1-10-78 ஞாயிற்றுக்கிழமை மாலை 5மணிக்கு யாழ்ப்பாணத் தொகுதி தமிழ் இளைஞர் பேரவையின் சார்பில்மாபெரும் சாதியொழிப்பு மாநாடு நடைபெறுகிறது. டாக்டர் வி. பரராஜசேகரம் இந்த மாநாட்டுக்குத் தலைமை தாங்குகிறர்.

நல்லை ஆதீனப்பீடாதிபதி திருப்பெருந்திரு. பரமாசாரிய சுவாமிகள், வண, சிங்கராயர் அடிகளார், பாஷா முகிதின் பிச்சை ஆலிமைத் தலைவர்களும் இதில் கலந்து கொள்ளுகிறர்கள்.

கூட்டணித் தலைவர் சிவா. உடுப்பிட்டித் தொகுதி பா.உ. திரு. த. இராசலிங்கம் உட்பட கூட்டணிப் பா.உ.க்கள் அனைவரும்இதில் உரைநிகழ்த்துகிறர்கள்.

மற்றும், சுதந்திரன் ஆசிரியர் கோவை மகேசன்,

—8-ம் பக்கம் பார்க்க

# புகைக்குண்டு புஸ்வாணமாகியது!
# புலிபோல முழங்கினர் அமிர்தலிங்கம்!

## லண்டனில் நடைபெற்றது என்ன?

லண்டன் வெஸ்ட் மினிஸ்டரிலுள்ள மத்திய மண்டபத்தில் 16-9-78 சனிக்கிழமை மாலை நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் ''தமிழர் விடுதலை இயக்கத்தில் சீமை வாழ் தமிழ் மக்களின் பங்கும்பொறுப்பும்'' எனும் தலைப்பில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலதிபர் திரு.அ.அமிர்தலிங்கம் பா. உ. இரண்டு மணித்தியாலங்கள் உரை நிகழ்த்தினார். [illegible] பெண்களுமாக ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் கலந்து கொண்டு தலைவரின் உணர்ச்சியும் தெளிவும் நிறைந்த பேச்சைச்செவிமடுத்தனர்.

இக்கூட்டத்தில் சில விஷ

—8-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் ஈழத்தேசிய இனத்தின் விடுதலைக் குரல்




கே. குழந்தைவேல்,
கொழும்பு-13.

கே: திரு. தொண்டமானுக்கு மந்திரி பதவிகொடுத்ததன் மூலம் மலையகத்தமிழர்களைஅரசுசாந்தப்படுத்தி விடமுடியுமா?

ப: மலையகத்தில் நான்கு ஐந்து சிங்களக்குண்டர்களால் ஒரே நேரத்தில் கதறக் கதறக் கற்பழிக்கப்பட்ட தமிழ் மாதர்களின் கண்ணீர் இன்னும் காயவில்லை; எரிக்கப்பட்ட 'லயன்'களிலிருந்து எழுந்த தீச்சுவாலை இன்னும் அடங்கவில்லை; விரட்டப்பட்ட தமிழ் தொழிலாளர்களின் பீதி இன்னும் அகலவில்லை; பறிக்கப்பட்டஅற்பசொற்ப சொத்துக்களுக்கு இன்னும் பதிலே இல்லை: இந்நிலையில் சிங்களஅரசின் பிச்சையான மந்திரிப்பதவியெனும் மாயமானை நம்பியா மலையகத் தமிழர்கள் அமைதியடைந்திடப் போகிறார்கள்?

* * *

கே. வசந்தி,
யாழ்ப்பாணம்.

கே: தமிழ்க்கொலை என்றால் என்ன குயுக்தியாரே?

ப: இலங்கைஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ்ச் சேவையில் அதிகாலையில் 'பௌத்த நற்சிந்தனை'யை ஒரு நாளைக்கு கேட்டுப் பாருங்கள்; அப்போது தமிழ்க்கொலை என்றால் என்னவென்பது விளங்கும்!

கே: தமிழ் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரதிநிதிகளை ஒதுக்கிவிட்டு, தாமே நேராகத் தமிழ்மக்களிடம் சென்று சேவை செய்யப் போவதாக ஜனாதிபதி ஜே.ஆர்.கூறியிருப்பதுபற்றி என்ன சொல்கிறீர்கள்?

ப: எல்லோரும் ஏறி இளைத்த குதிரையில் சக்கடத்தார் ஏறிச் சறுக்கி விழப்போகிறார்! அவ்வளவு தான்!

* * *

பா. சுப்பிரமணியம்,
அக்கராயன் குளம்,
கிளிநொச்சி.

கே: தமிழர் விடுதலைக் கூட்டணி பா. உக்கள் சிலரின் ஒரு தலைப்பட்சமான சர்வாதிகார நடவடிக்கைகள் காரணமாக தீவிரவாதிகளான பழைய தொண்டர்கள் பலர் இயக்கத்தைவிட்டு ஒதுங்க நேரிடுகிறதே— இதற்கு என்ன சொல்கிறீர்கள்?

ப: அப்படிப்பட்ட சர்வாதிகார நடவடிக்கைகளில் யாராவது எம். பி. இறங்கினால், அவரது அத்தகைய நடவடிக்கைகளை எதிர்த்து இயக்கத்துக்குள் நின்று போரிட வேண்டுமே தவிர— எந்தத் தொண்டரும் இயக்கத்தை விட்டு விலகி ஓடக்கூடாது. அப்படி விலகிச் செல்வது படு கோழைத்தனம். தவறுகளை, தீமைகளை உள்ளிருந்து எதிர்ப்பது தான் வீரம்! அநீதி நடக்கும் போது அதை அந்த இடத்திலேயே தட்டிக்கேட்டுத் திருத்தாது விட்டு விலகியோடினால், நாமும் அநீதிக்கு உடந்தை என்றாகி விடும்!

* * *

எம். சி. எம். அப்துல் காதர்
ஆலடி வீதி,
மருதமுனை-1
கல்முனை.

கே: தமிழர் விடுதலை இயக்கம் இதுவரை தமிழ் பேசும் மக்களுக்கு சாதித்த சாதனைகள் என்ன?

ப: பிரிந்துநின்ற தமிழ் பேசும் மக்களை ஒரே அணியில் திரட்டியது; சிறுபான்மை இனம் என்று தன்னை நினைத்துக்கொண்டிருந்த தமிழினத்தை ஒரு தனித்தேசிய இனம் ஆக்கியது; 1977 பொதுத் தேர்தலை ஒரு பொதுசன வாக்கெடுப்பாகப் பிரகடனப் படுத்தி, தமிழின விடுதலைக் கோரிக்கையை ஜனநாயக ரீதியாக நிலைப்படுத்தியது; உலக நாடுகளில் தமிழ் ஈழக் கோரிக்கையின் நியாயத்தை எடுத்துச்சொல்லி ஆதரவு திரட்டி வருகிறது; தொடர்ச்சியான எதிர்ப்பியக்கத்தின் விளைவாக ஒரு சில மொழியுரிமைகளையாவது அரசியல் சட்டத்தில் அரசாங்கம் புகுத்தியே தீரவேண்டிய சூழ்நிலையை வெளியே வளர்த்தது; தமிழ் தேசிய இனத்தின் இறைமையை சிங்களவர்களுக்கு தாரை வார்த்துக் கொடுக்க உறுதியுடன் மறுத்து வருவது; இப்படிப்பல!

* * *

பி. இம்மானுவல்,
குப்பிழான்,
ஏழாலை.

கே: கிழக்கிலும் வடக்கிலும் உதயசூரியன் உதிக்க தெற்கே சேவல் கூவும் என்றீர்களே இப்போது என்ன கூறுகிறீர்கள்?

ப: சேவல் என்று தான் நம்பினோம்—அது இப்படிப் பெட்டைக் கோழியாகும் என்று யார் நினைத்தார்கள்?

* * *

வி. விஜயரத்தினம்,
திருநெல்வேலி வடக்கு,

கே: கூட்டணியால் இனி எதையும் சாதிக்க முடியாதென்று நீதிமந்திரி திரு. தேவநாயகம் கூறியிருக்கிறாரே—!

ப: குந்திக்குப்பிள்ளைகள் பிறந்ததைப் பார்த்து குழந்தையே பெறாத திருதிராட்டிரன் மனைவி அம்மிக்குழவியை எடுத்து தனது வயிற்றில்குத்திக்கொண்டாளாம். தம்மால் எதையும் சாதிக்க முடியாத நிலையிலிருக்கும் திரு. தேவநாயகம், கூட்டணியைப் பார்த்து கொக்கரிக்கிறார் பாவம்!

# கருணாநிதியின் கவிதை!

எங்களுக்கு உயிராக வாய்த்த தமிழே!
திங்களுக்கும் மாசுண்டு—
இந்தமிழே நீ களங்கமிலாக் கதிர் ஒளிதான்!
பொங்கலுக்குச் சுவை கூட்ட வெல்லம் வேண்டும்—
பொதிகைமலைத் தமிழே உனைவளர்க்க
நல்ல உள்ளம் வேண்டும்—
சங்கொலிக்கும் போர்க்களத்தில் வீரமாய்த் தழைக்கும்
தமிழே! வெற்றியாய் விளையும் தமிழே!
அங்கொலிக்கும் தோல்விப்பேச்சு இனி எதிரிக்கேயன்றி
நமக்கல்ல என நாடதிர நகைப்பாய் தமிழே!
பங்குவைத்துத் தமிழர் வாழ்வைக் கூறுபோட
எங்குதித்த ஆட்கள் எலாம் வந்துவிட்டார்
கங்குகரை இல்லாமல் தமிழர்படை திரள வேண்டும்
கண்மூடி ஊமைகளை விழிக்க வைத்துப் பேசவைத்து
களம் நோக்கி நடை போடச் செய்யவேண்டும்...
அந்தக்
கனல் கிளம்ப எங்கள் சொல்லில் செயலில்
கலந்திருந்து உறவாடும் புறப்பாட்டே!
கலிங்கத்துப் போர்ப்பாட்டே! கடற்கோளுக்கும்
அழியாமல்
கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே
முன் தோன்றி மூத்த குடியின் பழம்பாட்டே! இன்று
நான் பாடும் புதுப்பாட்டுக்குச் சுவை வழங்கும்
மா, பலா, வாழைத் தமிழே! நீ வாழ்க நன்று!

## அண்ணா

பொங்கு கடல்நடையும் பூவையரின் மென்நடையும்தன்
புதுத் தமிழ் நடையில் காட்டியவன்
பொல்லாங்கு உரைப்போரை வாதத்தில் மாட்டியவன்
பொடியெடுத்துப் போடும் நேரம்
புன்னகையால் எதிரிகளைப்
பொடியாகி வாட்டியவன்.
புழுதிக் குணம் படைத்தோரை ஓட்டியவன்.
பொன் மகுடம் தமிழ்தாய்க்குச் சூட்டியவன்.
எழுதுகோல் வைத்திருந்தான் அண்ணன்— அது
ஏமாந்த தமிழர்களின் தலையெழுத்தை மாற்றத்
தாளில் உழுத கோல்!
பாக்குக்கும் வெற்றிலை சுண்ணாம்புக்கும் அவர் வாய்
சிவக்கும்
தாக்குதற்கு தமிழர்களை இந்திமொழி வந்தால்
அவர் கண் சிவக்கும்.
'அக்ராசனாதிபதி'யை அவைத்தலைவராய் உலவவிட்டார்
அந்த நாள் ''பிரசங்கம்''—சொற்பொழிவாய்
மாறிற்றின்று!
'நமஸ்காரம், கிமஸ்காரம்' எல்லாம்
நலமான தமிழிலே
நல் வணக்கமாய் மலர்ந்தது காண்!
தூய்மையாய்த் தமிழில்
கொடியேற்றுவிழா வந்த பின்னர்
துவஜா ரோகணத்துக்கு அங்கென்ன வேலை?
'வாய்மையே வெல்லும்' என்றதும்
'சத்யமேவஜயதே' கோபித்தா கொண்டது?
சங்கம் வளர்த்த தமிழில் அர்ச்சனை கூடாதென்று
சங்கராச்சாரியாரும் கூறுகின்றார்; இன்று
காஞ்சி பீடத்து போர் முறையைச் சந்திக்க
காஞ்சித் தலைவன் நமக்குக் கற்றுக்
கொடுக்காமல் போகவில்லை...
ஆண்டவர்க்கு ஆலயத்தில் அன்னைமொழியில்
அர்ச்சனை வேண்டாமெனில் அந்த
ஆண்டவரும் நமக்கு வேண்டாமென
முரசறைவோம்!
அண்ணன் என்ற இளந்தென்றலுக்கு நாம் தம்பிகள்!
அதே நேரத்தில் பெரியார் என்ற
பெரும் புயலுக்கு நாம் பேரப்பிள்ளைகள்!
வடமொழித் திணிப்பாளர் நம்
வரலாற்றை மறக்க வேண்டாம்!
அடலேறுத் தமிழ் இனத்தின் கால் மிதித்தால்
நம் கால்கள் மொழிப் பகைவன்
தலை மிதிக்கும் எச்சரிக்கை!

பூனைகளே சிறுத்தையைப் போல் உறுமும்போது
சிறுத்தைகள் நாம் சினந்தெழுந்தால்
புவி நடுங்கப் போர் நடக்காதா?
சிறைச்சாலை, சித்திரவதை இவையெல்லாம்
கழகத்துக் காரனுக்குப் பழைய கதை!
ஆட்சிக்கு இந்தி மொழியாம்—
ஆண்டவன் பூஜைக்கு வடமொழியாம்—
ஒரு தமிழன் மிச்சமாக உயிரோடிருக்கும் வரை
ஒப்பமாட்டான்! ஒதியமிலார்—முருங்கைக்கொம்புகள்
தப்பமாட்டா இரும்புத் தூண்களை மோத வந்தால்!

நெல்லிக்காய் மூட்டையென்று தமிழர்களை
நினைத்து விட்ட காரணத்தால்
நெஞ்சழுத்தம் வளர்கிறது; நறுக்க வேண்டும்.
எல்லாத் தமிழர்களும் எப்போது கூடுவது?
பொல்லாதார் ஆதிக்கம் எப்போது புறங்காணச்
செய்வது?
எழுந்திடும் கேள்வி, எனக்குத் தெரியும்.
கரிசல் உண்டு மண்ணிலே
களைகள் உண்டு கழனியில்
பதர்கள் உண்டு நெல்லிலே
துரோகி உண்டு தமிழரில்
தொலைவில் இல்லை அருகிலே!
பதவிகள் வேண்டும்; தினம்
பல்லக்குச் சவாரி வேண்டும்—அதற்காகப்
பகைவரின் பாதத்தைக் கழுவிடவேண்டும்— எனில்
பாய்ந்தோடி முந்திக்கொள்ளும் வீடணர்கள்
காணும் சுகம்
பரத்தையர்கள் ஆடவரின் பிணத்தைத் தழுவிக்
காசுபெறும் சுகம்போல் தானே!
—அதனால்—
தமிழ்த் துரோகிகளைக் கண்டு
அஞ்சவேண்டாம்—அவர்கள்
துருப்பிடித்த ஆணிகள்!
அண்ணா பெரியார் படங்களைக்கூட
அந்த ஆணிகள் தாங்கமாட்டா!
அவர்கள் கொள்கைகளை
எங்ஙனம் தாங்கிடுவார்!
கோழைகள் விலகட்டும்
வீரர்கள் தொடரட்டும்
கொட்டுக முரசென்று
இனமுழக்கம் செய்திடுவோம்.
இழிவுகளை அகற்றிடுவோம்.
அகரம் தமிழுக்கு முதல் எழுத்து
அண்ணாவின் பெயரோ தமிழர்க்கு முதல் எழுத்து
அந்த முதல் எழுத்துத் தலைவர் தந்தது
முன்னேற்றக் கழகம்!
முன்னேற்றம் தமிழர்க்கு வாய்ப்பதெனில்
முப்பெரும் விழா மட்டும் போதாது......
இப்பெரும் நாடு காக்க நமது மொழி காக்க
இன்றைக்கே சூளுரை ஏற்க வேண்டும்.
பெரியாரின் துணிவுதனைப் பெறுதல் வேண்டும்
பேரறிஞர் அண்ணாவின் தெளிவுதனை உணரவேண்டும்
பேரெதிர்ப்புக்கு அஞ்சாத உறுதிவேண்டும்—
ஆறிலும் சாவுதான் நூறிலும் சாவுதான்
ஆனது ஆகட்டுமே என்று
உயிர்த்தித்திப்பை எண்ணாத தியாக உள்ளம்வேண்டும்—
ஊடுருவும் துப்பாக்கி ரவைகளுக்குத் தீரநெஞ்சைத்
திறந்து காட்டல் வேண்டும்—
''மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை
எமை மாட்ட நினைக்கும் சிறைச்சாலை''
என்ற புரட்சிக்கவியின் திண்மை வேண்டும்.........
புரட்டுக்களை உருட்ட வேண்டும்!
புதுமைகளை வளர்க்க வேண்டும்!
போலிகளைப் பொசுக்க வேண்டும்—
போர்க்குண மறவராய் உலவ வேண்டும்—
என்றுமே பெரியார் அண்ணா—நம்
இதயத்தில் வாழ வேண்டும்.

—நன்றி:- முரசொலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னிய ஆட்சி உருவாக்கிய செயற்கை அமைப்பே இலங்கை

## மூன்று தனித்தனி அரசுகளை இணைத்தவன் வெள்ளையனே!

## 'பொன்' மாநாட்டில் வி. என். நவரத்தினம் முழக்கம்!



மேற்கு ஜெர்மனியின் தலைநகரான 'பொன்'னில் 5-9-78முதல் 13-9-78வரை நடைபெற்ற சர்வதேசபாராளுமன்ற மாநாட்டில் தமிழ் ஈழ நாட்டின் சார்பில் கலந்து கொண்ட சாவகச்சேரி பா. உ. வி.என். நவரத்தினம் அவர்கள், ''உலகிலிருந்து காலனித்துவத்தை முற்றாக அகற்றும் முயற்சிகளை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லுதல்'' என்ற தலைப்பில் நடைபெற்ற விவாதத்தின் போது நிகழ்த்திய உரை இது—

தலைவர் அவர்களே சக பாராளுமன்ற உறுப்பினர்களே,

இருபதாம் நூற்றுண்டின் இறுதிப்பகுதியில் நாம் இன்று வாழ்ந்துகொண்டிருந்த போதிலும், இன்னும் கூட காலனித்துவத்துக்கு ஒரு முடிவு கட்டி பூகோள உருண்டையிலுள்ள பல்வேறு பகுதிகளுக்கும் தேசிய சுதந்திரம்கிடைக்கச் செய்ய வேண்டிய வழிவகைகள் பற்றி விவாதிக்கு ம் நிலையிலிருப்பது உள்ளபடியே வேதனைக்குரிய ஒருநிலைமைதான்.

இன்று கடைகெட்ட இனவாதமும், சுதந்திரத்துக்கும் ஜனநாயகத்துக்கும் எதிரான கொடுமைகளும்மலிந்திருக்கும் தென்னுபிரிக்கா, நமீபியா, தெற்குறொடீசியா ஆகிய நாடுகள் மீது எமது கவனம் திருப்பப்பட்டுஇருக்கிறது. எனக்கு முன் பேசிய சகல பேச்சாளர்களும் இது பற்றி போதுமான அளவுக்குப் பேசிவிட்டார்கள். இங்கே கூறப்பட்ட கருத்துக்களுடன் நானும் இணைந்து கொள்ளுகிறேன்.

றொடீசியாவிலும் நமீபியாவிலும் மட்டுமல்ல— உலகின் எந்தப்பாகத்திலிருந்தும் எந்த வடிவத்தில் வந்தாலும்— காலனித்துவத்தை அடியோடு துடைத்தெறிய உலகநாடுகள்— குறிப்பாக சர்வதேச பாராளுமன்ற ஒன்றியம்— முழுமையான முயற்சியை மேற்கொள்ள வேண்டும். ஒரு காலனித்துவ ஆட்சியின் கீழ் வாழுகின்றமக்களின் உணர்வுகளையும் அபிலாஷைகளையும் நான் பிரதிநிதித்துவம் வகிக்கும் மக்கள் நன்கு அறிவார்கள். அரசியல் அடிமைத்தனம் மக்களிடமிருந்து அவர்களது ஆர்வத்தைப்பறித்து, அவர்களை மனேதத்துவரீதியில் அடிமைகளாகவும், அரசியலில் பட்டமரமாகவும் ஆக்கக்கூடியது என்பதை நாங்கள் தெரிந்திருக்கிறேம்— அனுபவ ரீதியாகவும் உணர்ந்துள்ளோம்.

தலைவர் அவர்களே, ஆபிரிக்காவிலும், ஆசியாவிலும் இறைமையுள்ள தனித் தனியான பல்வேறு அரசுகளைக் கைப்பற்றிய காலனித்துவ வல்லரசுகள், அவற்றையெல்லாம் ஒரே நிர்வாகத்தின் கீழ் கொண்டுவந்திருக்கின்றன. இப்படிச் சில அரசுகள் ஆட்சியாளரின் வசதிக்காவே இணைக்கப்பட்டன என்பதை நாம் அறிவோம். ஆபிரிக்காவிலும், ஆசியாவிலும், சுதந்திரமாகவும் இறைமையுடனும் இயங்கிய இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அரசுகள் அடிமைப்படுத்தப்பட்டபின்னுல், ஒன்றுடன் ஒன்று இணைக்கப்பட்டு ஒரே அரசாக ஆளப்பட்டு வந்ததை நாம் அறிவோம்!

இப்பொழுது சிறீலங்கா என்று அழைக்கப்படும் நாட்டில் நடைபெற்றிருப்பதும் இதுதான். சுதந்திரமும், இறைமையும் கொண்ட மூன்று தனித்தனி அரசுகள் ஒன்றுடன் ஒன்று நட்புறவுடன் இத்தீவில் இயங்கிவந்திருக்கின்றன. இந்த மூன்று அரசுகளும் வெவ்வேறு காலகட்டங்களில் பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் கொண்டுவரப்பட்டன. தொடக்கத்தில் அன்னிய ஆட்சி இந்த மூன்று அரசுகளையும் தனித் தனியாக நிர்வகித்து வந்தபோதிலும், வெஸ்ட்மினிஸ்டரிலிருந்த ஆட்சியாளரின் நிர்வாக வசதிக்காக இந்த மூன்று அரசுகளும் ஒரே பரிபாலனத்தின் கீழ் கொண்டு வரப்பட்டன. மூன்று தனித் தனி அரசுகளை பலவந்தமாக ஒன்றிணைத்து பிரிட்டிஷார் ''சிலோன்'' என்ற ஒற்றை அரசை செயற்கையாக உண்டாக்கினுர்கள்.

இந்தியா உட்பட உலகின் பல்வேறுபகுதிகளிலும்பிரிட்டிஷார்இம்மாதிரியே நடந்து கொண்டார்கள்; பிரெஞ்சுக்காரரும் ஸ்பானிஷ்காரரும், போர்த்துக்கீயரும், உலகின் பலபகுதிகளிலும், குறிப்பாக ஆபிரிக்காவிலும் லத்தீன் அமெரிக்காவிலும் இப்படியேதான் நடந்துகொண்டார்கள்.

காலனித்துவ வல்லரசுகள் தாங்கள் ஆட்சிபுரிந்த நாடுகளை விட்டு வெளியேறிய போது—அன்னிய ஆட்சியின் குடியேற்ற வாதக் கொடுமைகளையும் விடமேலும் மோசமான புதியகுடியேற்ற வாதம்— பழைய குடியேற்ற வாதக் கொள்கையின்விளைவாக முகிழ்த்தெழுந்தது. இதனுல்தான் தலைவர் அவர்களே, அன்னிய ஆட்சிவெளியேறி பலகாலமாகியும் கூட உலகின் பல நாடுகளிலும் பல்வேறு தேசிய இனங்கள், தங்கள் தேசியத் தனித்தன்மையை மீண்டும் புனரமைக்கவும், தமது சுதந்திரத்தை மீட்கவும் இன்று போராடிக்கொண்டிருக்கின்றன.

இந்த நிலையை உலக சமுதாயமும் சர்வதேசப்பாராளுமன்ற ஒன்றியமும் கவனத்துக்கு எடுக்கவேண்டும். இம்மாதிரியான பிரச்சினைகளுக்கு தானுகத்தீர்வு ஏற்படட்டும் என்று விட்டுவிடாது, அதன் ஆரம்ப நிலையிலேயே தீர்த்துவைபதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

பிரிட்டிஷார் வெளியேறி ஏறத்தாழ 25 ஆண்டுகள் கழிந்தபின்பே—பல இலட்சம் மக்களின் உயிர்த்தியாகத்தின் மீதுதான்— கிழக்கு பாக்கிஷ்தான் என்று முன்பு அழைக்கப்பட்ட பிரதேசத்தில் வாழ்ந்த மக்களின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட்டது.

மேற்கு சகாரா பகுதியிலுள்ள நிலைமைபற்றி மொராக்கோ, அல்ஜியர்ஸ், ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் அதேபோன்ற உணர்ச்சியுடன் இங்கு பேசினுர்கள். நானும் இங்கு உணர்ச்சியுடன் பேசியிருந்தால், அதற்குக் காரணம் இங்கு விவாதிக்கப்படும் பிரச்சினை நான் பிரதிநிதித்துவம் வகிக்கும் மக்களுடன் தொடர்புள்ளதாகவும் முக்கியமானதாகவும் இருப்பது தான்.

இம்மாதிரியான நவீன குடியேற்றவாதம் உலகின் பல்வேறு பகுதிகளிலும் நிலவிவருவதையும்,, இதன் விளைவு பயங்கரமானதாகவும், உலகில்பதட்டநிலையை தோற்றுவிக்கக் கூடியதாகவும், உலகசமாதானத்துக்கு சவாலாக இது விளங்குவதையும் நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். ஆகவே காலனித்துவம் எந்தஉருவத்தில் எங்கிருந்தாலும், அதை ஒழித்துக் கட்டக்கூடியவாறு இந்தத் தீர்மானத்தை நாம் செயற்படுத்துவோமாக.

# தேவநாயகத்துக்கு பகிரங்க மடல் (2)

அன்புள்ள அமைச்சர் தேவநாயகம் அவர்கட்கு—

எங்கள் ஆபீஸ் பையன் இருக்கிறுனே — அவன்படு சுட்டிப்பயல். சென்றவாரம் உங்களுக்கு கடிதம் எழுதி முடிக்கும்போது இரைக்க இரைக்க ஓடிவந்தான். அமைச்சர் ஐயாவுக்கா கடிதம் எழுதுகிறீர்கள்? எனக்கும் ஒரு சிறு சந்தேகம்; அதையும் எழுதிக்கேட்டு விடுங்களேன் என்று தலையைச் சொறிந்தான், என்னப்பா?என்றேன். அமைச்சர் ஐயா பதவிக்கு வந்ததும் வராததுமாக கதிர்காமம் ராமகிருஷ்ண மடத்தை மறுபடியும்இந்துக்களிடம் திருப்பிக் கையளிக்கப்போவதாகக் கூறியிருந்தாரே—அந்த விஷயம் என்னுச்சு? ஒராண்டுக்கு மேலாகி விட்டதே— அதைப்பற்றியும் கொஞ்சம் கேளுங்கள் என்று கூறிவிட்டு அங்கிருந்து ஓடி விட்டான்.

அவன் கிடக்கிருன் விடுங்கள்—உங்களுக்குத்தான் ஆயிரம் தொல்லைகள் இருக்கும்; அதற்கிடையே இந்துக்களின் உரிமைபற்றி அக்கறை செலுத்த உங்களுக்கு எங்கே நேரம்? அப்படியே அக்கறை செலுத்தினுலும் உங்கள் பேச்சை ஜனுதிபதியோ ஏனையசக அமைச்சர்களோ காதில் விழுத்திக் கொண்டால்தானே! இது அந்த முட்டாளுக்கு எங்கே தெரியப் போகிறது? ஏதோ பேச்சுக்குச் சொன்னதெல்லாவற்றையுமே செய்துவிட முடியுமா என்ன?

அது கிடக்கட்டும் — புதிய அரசியல் சட்டம் வந்ததும் தமிழர் பிரச்சினை தீர்ந்து விடும் என்றீர்கள் — அச்சட்டம் வந்தபின்னுல், மொழிப் பிரச்சினை இனப்பிரச்சினை யாவும் தீர்ந்து விட்டது; இனிமேல் கூட்டணியின் சாயம் வெளுத்துவிடப் போகிறது என்றீர்கள்; தமிழர் பிரச்சினை புதிய அரசியல் சட்டத்தின் கீழ் எப்படித் தீர்த்துவைக்கப்படப் போகிறது என்று அறிவதில் நானும் மெத்த ஆர்வத்துடன் கவனம் செலுத்திவந்தேன்—அது எப்படித் தீர்க்கப்படப்போகிற [illegible] பதை இப்போது [illegible] அதி உத்தமர் 'தார்மீகம்' புகழ் ஜே. ஆர். ஜெயவர்த்தன அவர்கள் 'பச்சையாக' அறிவித்து விட்டிருக்கிருர்!

ஆம், தமிழ் பிரதேசங்களில் சிங்களவர்களை பெருமளவில் குடியேற்றி தமிழ்ப்பிரதேசம் என்று சொல்வதற்கே ஒரு துண்டு இடமில்லாமல் அவற்றையெல்லாம், சிங்களப்பிரதேசமாக்குவதன் மூலம் தமிழ்ப் பிரச்சினையை அவர்தீர்த்துவைக்கப் புறப்பட்டிருக்கிருர்!

தமிழர்களுக்கென்ஒரு பிரதேசம், தனித்தாயகம், தனித்துவம் இன்று இருப்பதால் தானே தமிழினப் பிரச்சினையென்ற ஒன்று திராமல் கடந்த 30 ஆண்டுகளாக இருந்து வருகிறது. அந்தப் பிரதேசத்தையே இல்லாமற் செய்து — தாயகம் என்று சொல்லிக்கொள்வதற்கு தமிழர்களுக்கு இடமேயில்லாமற் செய்து விட்டால் — தமிழினம் சித [illegible] இனத்துடன் சங்கமமாகி விடுமென்ற அதிபுத்திசாலித்தனமான திட்டத்தை செயற்படுத்துவதன் மூலம் இனப் பிரச்சினைக்கு தீர்வு காணப்புறப்படுகிருர் உங்கள் அபிமானக் குருநாதர்.

வடக்கே சிங்களவரையும், தெற்கே தமிழரையும் குடியேற்றப் போவதாக ஜே. ஆர். ஜெயவர்த்தன உங்கள் முன்னிலையில் அரசாங்கப் பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் அறிவித்திருப்பதற்கு இதை விட வேறு ஏதாவது அர்த்தம் உண்டென்று நினைக்கிறீர்களா? தமிழர்களுக்கென்று மரபுவழித்தாயகம் ஒன்று கிடையாதென முன்பு தேசியபேரவையில் திருவாய் மலர்ந்தார் உங்கள் தார்மீகத்தலைவர்: இப்போது சொல்லைச் செயலாக்க சிங்களக் குடியேற்றத்தை ஆயுதமாக கொள்ளுகிருர்!

பெரும்பான்மை சிங்கள இனத்துடன் எண்ணிக்கையில் சிறுபான்மையான ஒரு தேசிய இனத்தை இரண்டறக் கலக்கச் செய்வதன் மூலம்தான் இனப்பிரச்சினைக்கு 'தீர்வு' காணப் போகிறீர்களா? பாம்பின் வாய்த்தவளை போல, கருடன் வாயில் கோழிக்குஞ்சு போல— தமிழினத்தின் அழிவில் தேசியஒற்றுமை காணப் போகிறீர்களா?

இவைகளை உங்களிடம் கேட்டுத்தான் பயன்என்ன? மதுறு ஓயா குடியேற்றத் திட்டப்பிரச்சினையில் கூட உங்கள் சொல் அம்பலமேறவில்லையே! மதுறு ஓயாத் திட்டத்தில், கல்குடாத் தொகுதியில் தமிழர்கள் மட்டுமே குடியேற்றப்படுவர் என்று நெஞ்சை நிமிர்த்தி அறிவித்தீர்கள்! உங்கள் வாயை அடைக்கும் முறையில் நாடு முழுவதிலுமிருந்து சகல இன மக்களையும் மதுறுஓயாவில்குடியேற்றப் போவதாக அமைச்சர் காமினிதிசநாயகா மறுநாள் அறிவித்திருந்தாரே! அதன்

—4-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணம்

## பயமுறுத்தல் பலிக்காது!

உண்மையான மக்களாட்சி முறை நிலவும் எந்த ஒரு நாட்டிலும், மக்கள் முன்னால் தனது கொள்கைகளையும் குறிக்கோளையும் முன்வைத்திடவும், அக்கொள்கைகளையும் குறிக்கோளையும் நிறைவேற்றிடுவதற்கு மக்கள் தந்த ஆணைப்படி செயற்படவும், எந்த ஓர் அரசியல் இயக்கத்துக்கும் உரிமை இருக்க வேண்டும். இந்த அடிப்படை உரிமை எவ்வகையாகவேனும் ஓர் அரசியல் இயக்கத்துக்கு மறுக்கப்படுமானால், அந்த நாட்டில் ஆரோக்கியமான ஜனநாயகம் நிலவவில்லையென்பதே அர்த்தமாகும்.

ஒரு கட்சி ஆட்சி, அல்லது சர்வாதிகார ஆட்சி நிலவும் நாடுகளில் மட்டும் தான், ஆளுங்கட்சியுடன் ஏனைய அனைத்துக்கட்சிகளும் சங்கமமாகி விட வேண்டும் என்று கட்டாய நிபந்தனை விதிக்கப்படுவதுடன் அதற்கு இணங்கி வராத மாற்றுக்கருத்துக் கொண்ட அரசியற் கட்சிகளுக்கு சட்டரீதியாகத் தடையும் விதிக்கப்படும்!

இலங்கையை ஒரு ஜனநாயக நாடென்றும், தம்மை ஜனநாயகத்தின் காவலர் என்றும் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன அவர்கள் அடிக்கடி உரத்துக் கூறிக்கொண்ட போதிலும்—அண்மையில் அரசாங்கப்பாராளுமன்றக் குழுக்கூட்டத்தில் அவர் பேசியதாகப் பத்திரிகைகளில் வெளிவந்திருந்த ஒரு கருத்தைப் படிக்கும்போது—இங்கு உண்மையில் ஜனநாயகம் வாழுகிறதா என்ற ஐயம் எவருக்கும் ஏற்படவே செய்யும்.

ஜே. ஆர். ஜெயவர்த்தனவைத் தலைவராகக் கொண்ட இன்றைய சிறீலங்காவின் ஆளுங்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி கடந்த தேர்தலில் எப்படி சிங்கள மக்களின் ஆணையைப் பெற்று ஆட்சிப்பீடமேறியதோ—அதே போலத்தான் தமிழர் விடுதலைக் கூட்டணியும் தமிழ் ஈழ மக்களிடமிருந்து திட்டவட்டமான தெளிவான ஆணையைப்பெற்று அதிகார பூர்வமான எதிர்க்கட்சியென்ற ஸ்தானத்தை பேரவையில் வகித்து வருகிறது.

ஆளுங்கட்சியிலிருந்து முற்றிலும் மாறுபட்ட கொள்கை குறிக்கோளையும், அக்கொள்கை குறிக்கோளை நிறைவேற்றுவதற்கு தெளிவான மக்கள் ஆணையையும் பெற்று, அந்த ஆணையை நிறைவேற்றுவதொன்றையே மூலாதார நோக்கமாகக் கொண்டு இயங்கிவரும் எதிர்க்கட்சியான தமிழர் விடுதலைக்கூட்டணியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு விசித்திரமான ஒரு பயமுறுத்தலை விடுத்திருக்கிறார் ஜே. ஆர். ஜெயவர்த்தன.

''அரசுடன் ஒத்துழையுங்கள்—அப்படி நீங்கள் ஒத்துழைக்க மறுத்தால்......'' என்று கூட்டணி பா.உ.க்களை மிரட்டிப் பார்த்திருக்கிறார் அதி உத்தமர்.

ஓர் அரசியல் இயக்கம் அரசாங்கத்தோடு ஒத்துழைப்பதும், அல்லது ஒத்துழைக்க மறுப்பதும், அக்கட்சியும் அக்கட்சி பிரதிநிதித்துவம் வகிக்கும் மக்களும் தீர்மானிக்க வேண்டிய ஒரு விஷயமே தவிர—ஏனையோர் முடிவு செய்ய வேண்டிய ஒரு பிரச்சினையல்ல!

அரசோடு ஒத்துழைக்கத்தான் வேண்டும் என்று ஓர் எதிர்க்கட்சியை நிர்ப்பந்திப்பதற்கோ — அல்லது, ''ஒத்துழைக்காவிடின்......'' என்று ஆணவத் தொனியில் பயமுறுத்தவோ ஜனநாயகம் நிலவும் எந்த ஒரு நாட்டிலும் ஆளுங்கட்சித் தலைவருக்கு எதுவித அதிகாரமும் கிடையாது.

அரசாங்கத்துடன் எவ்வகையிலும் ஒத்துழைக்க மாட்டோம் என்று எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் அவர்கள் லண்டன் பி. பி. சிக்கு அளித்த செவ்வியின்போது தீர்க்கமான வார்த்தையில் அறிவித்த பின்னர், அதை அப்படியே ஏற்றுக்கொள்வதுதான் ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்டோருக்கு பெருமையளிப்பதாகுமே தவிர — ''ஒத்துழைப்பு அழைப்பை ஏற்காவிடின்......'' என்று அச்சுறுத்தும் பாணியில் பேசுவது கடைந்தெடுத்த சர்வாதிகாரத்தின் வெளிப்பாடேயாகும்.

ஒத்துழைப்பு அழைப்பை ஏற்க கூட்டணியினர் மறுத்தால், தாமே நேரடியாக வடபகுதிக்கு சென்று தமிழ் மக்களின் நலன்களை நிறைவேற்றுவாராம்—அகந்தையின் மறுபதிப்பாக ஜனாதிபதியின் குரல் இவ்வாறு ஒலிக்கிறது.

சிறிமாவோ ஆட்சி ஜனநாயக முறைப்படி தமிழ் மக்களால் தெரிந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளை அலட்சியப்படுத்தியது; ஆனால் நாமோ அப்பழுக்கற்ற ஜனநாயக வாதிகள்; நாம் ஆட்சிக்கு வந்தால் தமிழ் மக்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளை அலட்சியப்படுத்தாது அவர்களை அனுசரித்தே ஆட்சி நடத்துவோம் என்றார்கள் ஐக்கிய தேசியக்கட்சியினர் பொதுத்தேர்தலுக்கு முன்பு—

இன்றோ தொனி மாறுகிறது — பேச்சில் ஆணவம் ஏறுகிறது — மிரட்டல்கணைகள் ஏவி விடப்படுகின்றன தமிழர் விடுதலைக்கூட்டணி மீது!

மிரட்டல்கள், பயமுறுத்தல்கள், ஆணவப் பேச்சுக்கள்—எதுவும் தமிழ் ஈழத்தின் விடுதலையை நாடி நிற்கும் தமிழர் விடுதலைக் கூட்டணியை அதன் இலட்சியப் பாதையிலிருந்து பின்வாங்கவோ, சோர்வடையவோ, திசைதிருப்பவோ செய்ய மாட்டாது என்பதை மட்டும் அதிஉத்தமர் ஜே. ஆருக்கு பணிவன்புடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்!

# "பெரியாரும் செல்வாவுமே தமிழினத்தின் வழிகாட்டிகள்"

## கொழும்பில் வீரமணி பேச்சு!

''மறைந்த தமிழ்த் தலைவர் பெரியவர் செல்வநாயகம் அவர்கள் தமிழ் நாட்டுக்கு 1972ம் ஆண்டு வருகை தந்தபோது, அவரைப் பெரியார் ஈ.வெ.ரா. அவர்கள் அன்புடன் வரவேற்ற காட்சியை நான் உடனிருந்து கண்டு பூரிப்பு அடைந்தேன். ஆனால் இன்று இலங்கையில் அந்தப் பெரியாரை— தந்தை செல்வாவைக் காணமுடியவில்லையே என்று மனவேதனையில் துடிக்கிறேன்''

இவ்வாறு பம்பலபிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்ற தந்தை பெரியார் நூற்றாண்டு விழாவில் பேசிய திராவிடக்கழகப் பொதுச் செயலாளர் திரு. கி. வீரமணி அவர்கள் குறிப்பிட்டார். திரு.க.நவசோதி தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு. வீரமணி மேலும் பேசியதாவது:—

ஈழத்தமிழர்கள், எப்பொழுதும் நன்றி மறக்காதவர்கள் என்பதற்குஇவ்விழா ஒரு எடுத்துக் காட்டாக அமைந்திருக்கின்றது.

மனிதன் மானமுள்ளவனாக, சுயமரியாதையுள்ளவனாக வாழ வேண்டும். சோற்றுலடித்த பிண்டமாக வாழக் கூடாது. அந்த உணர்வுக்குக் கோடிட முடியாது.

தமிழகத்தில், தந்தை பெரியார் உருவத்தால் இல்லாவிட்டாலும், அவரின் கொள்கைகளைப் பொறுத்த வரையில், இன்றும். அவர் வாழ்ந்து கொண்டிருக்கின்றார், அதேபோல ஈழநாட்டிலும் தந்தை செல்வநாயகம் மறைந்தபின், லட்சோப லட்சம் தொண்டர்கள்அவர் வழி நடக்கின்றார்கள் என்பதைக் காணும்போது மகிழ்ச்சியேற்படுகின்றது.

இன்று நான் இலங்கையில் இருக்கும்போது, தந்தை செல்வநாயகமும், பகுத்தறிவுப் பெரியார் டாக்டர் கோவூரும் உயிருடன்இல்லாதது வேதனையைத் தருகின்றது.

ஆனால் அவர்கள் தந்த உணர்வு உங்களிடம் இருக்கும்போது, அதைக்காண மகிழ்ச்சி ஏற்படுகின்றது.

லட்சோப லட்சம் மக்களுக்கு பகுத்தறிவுப் பாலூட்டியவர் ஈ.வெ.ரா. பெரியார்.

ஈ.வெ.ரா. பெரியார் அரசியலைவிட்டு எவ்வளவுதூரம் ஒதுங்கியிருந்தாலும், அரசியல் அவரைச் சுற்றிச் சுற்றியேவந்திருக்கின்றது. தமக்கும், அரசியலுக்கும்தொடர்பில்லையென்று பெரியார் கூறி வந்த போதிலும், தமிழ் நாட்டு அரசியல் அவரைச் சுற்றிச் சுற்றியே வந்திருப்பதை அவதானிக்க முடிகிறது.

சமுதாயத்திலுள்ள மக்களுக்கு அநீதிகள், கொடுமைகள் இழைக்கப்படும்போது பெரியார், அங்கே தேவைப்படுகின்றார். அவருடைய அறிவுச் சுடர்கள் அங்கே தேவைப்படுகின்றன. அந்த வகையில், பெரியாரின்கருத்துக்கள், உலகளாவ ஓங்கி வளர்ந்து கொண்டிருக்கின்றன.—இவ்வாறு அவர் கூறினார்.

## மகாகவி பாரதி விழா

இலங்கை மத்திய வங்கி தமிழ் இலக்கிய மன்றம் ஒழுங்கு செய்து இருக்கும் 'மகாகவி பாரதி விழா' எதிர்வரும் 30-09-1978 சனிக்கிழமை மாலை 5-30 மணிக்கு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறும். அன்றைய தினம் காலை கொழும்பு தெற்கு கல்விப் பிரிவு தமிழ் பாடசாலை மாணவர்களிடையிலான பாரதியார் பற்றிய பேச்சுப் போட்டிகள் நடைபெறும். மாலை நிகழ்சிகளில் கவியரங்கம், சிறப்புச் சொற்பொழிவுகள், பாரதி பாடல் நிகழ்ச்சிகள் ஆகியனவும் இடம்பெற உள்ளன.

## தேவநாயகத் —

—3-ம் பக்கத் தொடர்

தமிழர் தாயகத்தில் சிங்களக்குடியேற்றத்தை நடத்தி இனக் கொலைநடவடிக்கையில் ஈடுபடத்துடிக்கும் ஜே. ஆர். ஜெயவர்த்தனவிடம் இந்த அநியாயத்தை எதிர்த்துக் குரலெழுப்ப வக்கின்றி வகையின்றி—தேவையானல் அமைச்சர் பதவியைத்தூக்கியெறிந்துவிட்டு களத்தில் குதிக்கும் சக்தியின்றி, அரசுக்கு ஆலவட்டம் வீசிவரும் நீங்கள், தமிழ்ப் பிரதேசம் பறிபோனால் அதற்குக் கூட்டணியினரே பொறுப்பு என்று புதிய கதையை அளந்திருக்கிறீர்கள்!

தமிழ் பிரதேசத்தில் சிங்களக் குடியேற்றம் நடைபெறுமானால்— ஜே.ஆர். ஜெயவர்த்தனவுடன் சேர்ந்து ஒத்துழைத்து அந்த இனஒழிப்பு கைங்கரியத்தை செய்து முடிக்கப்போகிறவர் நீங்களா அல்லது கூட்டணியினரா?

வடக்கில் சிங்களவரைக் குடியேற்றுவது அரசாங்கத்தின் கொள்கை என்று கூறிவிட்டார் ஜே.ஆர். அரசின் கொள்கை அது என்று கூறுகிறபொழுது— கூட்டுப் பொறுப்பின் அடிப்படையில் தமிழ்ப்பிரதேசத்தில் சிங்களவரைக்குடியமர்த்தும் இன ஒழிப்புக் கொள்கைக்கு அமைச்சர் தேவநாயகமாகிய நீங்களும் பொறுப்புத் தானே! ஆம், தமிழ்ப் பிரதேசத்தில் சிங்களக் குடியேற்றத்தை நீங்களும் சேர்ந்தே நடத்தப் போகிறீர்கள்! அப்படியானல் கூட்டணிஎப்படி இதற்குப் பொறுப்பாக முடியும்? அரசுடன் ஒத்துழைக்கும்நீங்களும் மற்றத் தமிழர்களுமன்றோ முற்றுமுழுதாக பொறுப்பேற்க வேண்டும்?

ஆனல் அமைச்சர் அவர்களே! ''நான் அரசுக்குக்கட்டுப்பட்டவன்; என்னால் எதுவும் செய்யமுடியாது; சிங்களக்குடியேற்றம் நடைபெறப்போகிறது; தமிழ்ப் பிரதேசம் எப்படியும் பாதுகாக்கப்பட வேண்டும்; அதைப் பாதுகாக்கவேண்டியது கூட்டணியின் தலையாய பொறுப்பு; சிங்களக் குடியேற்றத்தை முறியடித்து தமிழ் ஈழப்பிரதேசத்தைப் பாதுகாத்திட கூட்டணி இன்னும் வேகமாகவும் தீவிரமாகவும் இயங்கிடவேண்டும்; அப்படி கூட்டணி வேகமாக இயங்காமலிருந்து, போராடாமலிருந்து, அதனல் தமிழ் பிரதேசம் பறிபோகுமானல் அதற்குக் கூட்டணியே பொறுப்பேற்க வேண்டும்'' என்ற அந்தக் கருத்துப்பட நீங்கள் கூறியிருப்பீர்களானல், அதை நான் அப்படியே ஏற்றுக்கொள்ளுகிறேன்.

சரி, கடிதம் நீண்டுவிட்டது— உங்கள் மன்னாரப் பேச்சுப்பற்றி சென்றவாரம் விட்ட இடத்திலிருந்து அடுத்த வாரம் எழுதுகிறேன்.

## கோண்டாவிலில் அமரர்கள் நினைவு விழா!

கோப்பாய்க் கோமான் அமரர் வன்னியசிங்கம், இரும்பு மனிதர் அமரர் நாகநாதன் ஆகிய இருவருக்கும் கோண்டாவில் மக்கள் 30-9-78சனிக்கிழமை மாலை 6மணிக்கு தந்தை செல்வா அரங்கில் நினைவு விழா எடுக்கின்றனர். கோண்டாவில் மேற்கு புகையிரதநிலையத்துக்கு அருகிலுள்ள காளி கோவில் முன்றலில் இந்த விழா அரங்குஅமைக்கப்பட்டுள்ளது. விழாவுக்கு பண்டிதர் நா.இராசையா தலைமை தாங்குகிறார்.

விழாவில் த.வி.கூ. தலைவர் திரு. மு. சிவசிதம்பரம், வி. தர்மலிங்கம், சி. கதிரவேலுப்பிள்ளை, வெ. யோகேஸ்வரன், க. துரைரத்தினம், செ. இராசதுரை, கா.பொ. இரத்தினம், த. இராசலிங்கம், ஈழவேந்தன், சி. நாகராசா, இ. விசுவநாதன், மு. ஆலாலசுந்தரம், கோவை மகேசன் ஆகியோர் உரையாற்றுவார்கள்.

''அமரர்கள் வரலாறு'' பற்றி கலைமணி எஸ். வடிவேலு குழுவினர் அளிக்கும் வில்லிசை நிகழ்ச்சி மாலை 6 மணிமுதல் 7மணிவரை நடைபெறும்.

## கூட்டணி மத்திய செயற்குழு இன்று கூடுகிறது!

தமிழர் விடுதலைக் கூட்டணியின் பாராளுமன்றக் குழுவும், மத்திய செயற்குழுவும் இன்று (1-10-78) ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்திலுள்ள கூட்டணியின் தலைமைச் செயலகத்தில் கூடுகின்றன. அவசரமாகக் கூட்டப்பட்டுள்ள இக்கூட்டங்களில், வடபகுதியில் சிங்களவர்களைக் குடியேற்றப் போவதாக அரசாங்கத்தினல் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கும் இனவாத குடியேற்றக் கொள்கைக்கு எதிராக கூட்டணி எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றி ஆராயப்படும். அத்துடன் முந்திய அரசு போலவே, ஜே.ஆர் அரசும் பொய்க்காரணங்களைக் காட்டி தமிழ் இளைஞர்களை கைதுசெய்து விளக்கமறியலில் காலவரையின்றி வைத்துவருவதால், இதற்கு எதிராக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் கூட்டணி மத்திய செயற்குழு ஆராயும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் மடல்

அன்பு நண்பா!

தமிழ் ஈழத்திருநாட்டை—நம் அருமைத் தாயகத்தை — தமது ஆயுதப்படைப் பலத்தைக் கொண்டு தமிழ் ஈழமக்களின் சம்மதத்துக்கு மாருகவும் சட்ட விரோதமாகவும் அடக்கியாண்டு ஆட்சி புரிந்து வரு சிங்கள சிறீலங்காவின் பெருந்தலைவர்—அதிஉத்தமர்-என்றெல்லாம் கூறப்படும் திரு. யூனியஸ் றிச்சாட் ஜெயவர்த்தன அவர்கள் தமிழ் தேசிய இனத்தையே முற்றாக ஒழித்துக்கட்டும் பயங்கரத் திட்டமொன்றை செயற்படுத்தப்போவதாக வெளிப்படையாகவே அறிவித்திருக்கிருர்; அறிவித்திருக்கிருரென்பதைவிட தமிழ் சமுதாயத்துக்கு இதை ஒருசவாலாகவே அவர் விடுத்திருக்கிருரென்பதே எனது கருத்தாகும்.

வடக்கில் சிங்களவர்களையும் தெற்கில் தமிழர்களையும் குடியேற்றுவதன் மூலம் — தமிழர்களுக்கெனத்தனியான பாரம்பரிய பிரதேசம்—தாயகம—சொந்தநாடு — என்பதே இல்லாமற் செய்வதன் மூலம்—தமிழ் தேசிய இனத்தின் சுதந்திரக் கோரிக்கையை கிள்ளியெறிந்து விடப்போவதாக திரு. ஜெயவர்த்தன அவர்கள் பயமுறுத்தியிருக்கிருர்!

தார்மீகம் பேசியவர்—சகல இனங்களுக்கும் சமத்துவம் தரப்போவதாக 'பெருந்தன்மை' பேசியவர் — புத்தபெருமானுக்கு அடுத்தவராகத் தம்மைக் காட்டிக்கொண்டவர்—உலகின் கண்களில் தம்மை ஒரு பெரும் ஜனநாயக இலட்சியத்தலைவர் போல உயர்த்திக் கொள்ள முற்பட்டவர் — இன்று ஹிட்லரையும் விடக்கொடிய இன ஒழிப்புக்கொள்கையின் தளகர்த்தராக தம்மை ஆக்கிக்கொள்ள முற்படுகிருரென்ருல் இது கண்டு சிலர் ஆச்சரியமடையக்கூடும்; மூக்கின் மேல் விரலை வைத்திடக்கூடும்; ஜே. ஆரா இப்படி என்று எண்ணிடக்கூடும்.

ஆனல் ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் உள்ளும் புறமும் நன்கு அறிந்தவர்கள் — அவரது கடந்தகால அரசியல் நடவடிக்கைகளை உன்னிப்பாக அவதானித்து அவரை எடைபோட்டு வைத்திருப்பவர்கள்—அவரது இனவாத, இன ஒழிப்புத் திட்டத்தைக்கண்டு அதிர்ச்சியோ, ஆச்சரியமோ அடையமாட்டார்கள்.

பெருங்காயத்தின் வாசனையை எப்படித்தான் மறைக்க முயன்ருலும் அது ஒரு போதும் மறையவே மறையாது; உயர உயரப் பறந்து பார்த்தாலும் ஊர்க்குருவி ஒருபோதும் பருந்தாக முடியாது; அது போல, சிங்கள இனவெறக்குட்டைக்குள்ளேயே ஊறி வளர்ந்த ஜே. ஆர். அவர்கள்—அதிலேயே தமது அரசியலை ஸ்திரப்படுத்திக்கொண்ட ஜே.ஆர். அவர்கள்—அதிலிருந்து விடுபட்டு விட்டாரென்று அறிவு படைத்த யாருமே எதிர்பார்த்திருக்கமாட்டார்கள்!

1943ம் ஆண்டு சிங்களமே நாட்டின் தேசிய மொழியாக இருக்க வேண்டுமென்ற தீர்மானத்தை முதன்முதலாக சட்டசபையிற் கொண்டு வந்தவரே இதே ஜே. ஆர் தான்; 1955 ஆண்டு யூ. என். பியின் களனி மாநாட்டில் சம அந்தஸ்துகொள்கைக்கு குழிதோண்டிப் புதைத்து சிங்களம் மட்டுமே ஆட்சி மொழியென்ற தீர்மானத்தை நிறைவேற்றி வைத்தவரும் இதே ஜே. ஆர். தான்; தமிழ் பிரதேசத்தில் சிங்களக்குடியேற்றத்தை தடுத்து நிறுத்துவதற்காக உருவான பண்டா-செல்வா ஒப்பந்தத்தை எதிர்த்து சிங்கள இனவெறியை வளர்த்து 1957ம் ஆண்டு கண்டி யாத்திரை செய்தவரும் இதே ஜே.ஆர்.தான்; 'பண்டா—செல்வா ஒப்பந்தம் மீண்டும் வந்தால் அதை எதிர்த்து கண்டி யாத்திரை நடத்துவேன்' என்று 1975ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் வைத்து அறிவித்தவரும் இதே ஜே.ஆர். தான்; 'போர் என்ருல் போர்; சமாதானம் என்ருல் சமாதானம்' என்று 1977 ஆவணி இனக்கொலையின்போது தமிழ் பிரதிநிதிகளைப் பார்த்துச் சவால் விட்டவரும் இதே ஜே. ஆர். தான்!

இத்தகைய பெருந்தலைவரே இப்போது தமிழ் தேசிய இனத்தின் மீது 'போர்ப் பிரகடனம்' செய்திருக்கிருர்; தமிழ் ஈழத்தில் சிங்களவரைக் குடியேற்றி தமிழர் தாயகம் என்று சொல்லிக்கொள்வதற்கு ஒரு துண்டு நிலம் கூட இல்லாமற்செய்து—தமிழ் மக்களின் ஜனநாயகக்கோரிக்கையான தமிழ் ஈழக் கோரிக்கையை முறியடித்துக்காட்டுகிறேன் என்று விசுவரூபம் கொண்டு புறப்பட்டிருக்கிருர் புதிய ஹிட்லர்,

நண்பா, மொழியுரிமையைக் கொடுத்து, அதிலே தமிழ் மக்கள் மயங்கியிருக்கும்போது, திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தின் மூலம் தமிழ் இனத்தின் மூலவேரையே அறுத்தெறிவது; வாழ்விடத்தை இழந்த தமிழ் இனம் காலப்போக்கில் தனது பலத்தை இழந்துவிடும்; அப்போது வெகு சுலபமாக நாடு முழுவதற்கும் சிங்களத்தையே ஆட்சிமொழியாக்கி விடலாம்—வாழ்விடத்தையே இழந்து எதிர்க்கும் சக்தியை இழந்த தமிழர்கள் மீது சுலபத்தில் சிங்களத்தைத்திணித்து நாடு முழுவதும் ''ஒரே மொழி, ஒரே இனம்'' என்ற நிலையை யாருக்கும் நோகாமல் ஏற்படுத்திவிடலாம் என்பதே டி. எஸ். சேனநாயகாவும் ஜே. ஆர். ஜெயவர்த்தனவும் சேர்ந்து ஆரம்பத்தில் 1947ல் போட்டிருந்த சதித்திட்டமாகும். இத்திட்டத்தின் படியே, தமிழினம் மயங்கிக்கிடந்த காலகட்டத்தில் கல்லோயாவும், அம்பாறையும், கந்தளாயும், அல்லையும் சிங்களக்குடியேற்றத்தினல் பறிக்கப்பட்டது.

1956ம் ஆண்டு திரு. பண்டாரநாயகா அதிகாரத்தைக்கைப்பற்றுவதற்காக அவசரப்பட்டு சிங்களம் மட்டும் என்ற கோஷத்தையும் கொள்கையையும் முன்வைத்த காரணத்தினல்— யூ.என்.பியின் திட்டம் பாழ்பட்டது; தமிழ் சமுதாயம் மயக்கம் தெளிந்து எழுந்தது; தனது தாயகத்திலேயே தனக்குப் பாதுகாப்பு உண்டென்பதை உணர்ந்தது; சிங்களக் குடியேற்றத்தின் பயங்கர ஆபத்தை புரிந்து கொண்டது. திரு. பண்டாரநாயகா அவசரப்பட்டு சிங்களம் மட்டும் கோஷத்தை 1956ல் எழுப்பியிருக்காவிட்டால், யூ.என்.பியின் திட்டம் அமைதியாக செயற்பட்டு, இன்று தமிழினமும் தமிழர் நிலமும், தனித்துவமும் அழிக்கப்பட்டிருக்கும்; தாம் அழிக்கப்படுகிருேம் என்பதுகூடத்தெரியாமலே தமிழர்கள் இனமாற்றம் செய்யப்பட்டிருப்பர்!

## இதோ ஒரு இட்லர்!

**இன்றைக்கும் டி. எஸ். காலத்து அதே பழைய திட்டத்தை செயற்படுத்தப் பார்க்கிருர் ஜே.ஆர் — அதாவது சில மொழிச்சலுகைகளை கொடுத்து நிலத்தைப்பறிக்க முயற்சிக்கிருர் அவர். ஆனல் ஒரே ஒரு வித்தியாசம்— அன்று தமிழர்கள் மயங்கிக் கிடந்தார்கள்; இன்று மயங்கக் கூடிய நிலையிலே தமிழன் இல்லை; அவன் எழுச்சி பெற்றுவிட்டான்— எதிர்த்துப்போராடத் தயாராகி விட்டான்!**

1977ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 6ம் திகதி தேசிய அரசுப்பேரவையில் பேசிய ஜே.ஆர், தமிழ்மக்களுக்கென்று பாரம்பரிய பிரதேசம் ஒன்று இருப்பதாக தான் ஏற்றுக்கொள்ளவில்லை என்று வெட்டொன்று துண்டிரண்டாகக் கூறினர்; இன்றைக்கு தமது சொல்லைச் செயலாக்கிட தமிழ் பிரதேசத்தில் சிங்களக் குடியேற்றம நடத்தப்போவதாக அறிவித்து விட்டார்!

**1977ம் ஆண்டு பொதுத்தேர்தலில் தமிழ் மக்கள் அளித்த ஜனநாயகத் தீர்ப்பை— தமிழ் ஈழக்கோரிக்கையை—முறியடிப்பதற்குத்தான் இந்த நடவடிக்கையாம். இதையும் அவரே அறிவித்திருக்கிருர். ஜே.ஆரின் இந்த அப்பட்டமான ஆக்கிரமிப்பு நடவடிக்கையை— இனஒழிப்பு நடவடிக்கையை —எதிர்த்துப்போராடுவதற்கு தமிழ் மக்களிடையேயுள்ள ஜனநாயக முற போக்குச்சக்திகள் அனைத்தும் ஒன்று பட வேண்டும்!**

பசி என்று அழுகிறது பச்சைக்குழந்தை— அதன் பசியைத்தீர்ப்பதற்குப்பதிலாக— குழந்தையையே வெட்டிக்கொன்று விடுவதன் மூலம் அதன் பசியை இல்லாமற் செய்துவிடுகிறேன்பார்என்றுபுறப்பட்டிருக்கிருர் அதி உத்தமர்! விடுதலை கேட்கிருர்கள் தமிழ் மக்கள்; உங்களுக்கு ஒரு பிரதேசம் இருப்பதாற்றனே விடுதலை கேட்கிறீர்கள்; பிரதேசத்தையே இல்லாமற் செய்து விடுகிறேன் பாருங்கள் என்று மிரட்டுகிருர் ஜே-ஆர்!

வடக்கில் சிங்களவரையும்— தெற்கில் தமிழரையும் குடியேற்றும் ஜே.ஆரின் திட்டம் அமுலானல்— தமிழன் வடக்கிலும் கூட நிம்மதியாக உயிர் வாழ முடியாத நிலை ஏற்படும்; நாடு முழுவதும் தெரு நாய் போல சிங்களவனிடம் நாள்தோறும் அடிபட்டு உதைபட்டு அவமானப்பட்டு அழிந்துபோக நேரிடும்; தாயகம் இழந்த இனம், அதன் பின்னர் ஒரு தேசிய இனமாக வாழ முடியாது. நாடோடிக்கூட்டமாக நாதியற்று அலைந்து அலைந்து அழிகின்ற நிலையே தோன்றும்.

நண்பா, 40 இலட்சம் தமிழ் மக்கள் நாடு முழுவதும் சுதந்திரமாக வாழவேண்டுமென்று விரும்புகிருர்களாம்; அந்த உரிமையைத் தாம் வழங்குவாராம்—கூறுகிருர் அதி உத்தமர். 1977ம் ஆண்டு ஆவணிக் கலவரத்தின் போது தெற்கில் படுகொலைக்காளான தமிழ்மக்களுக்குப் பாதுகாப்பு வழங்க சக்தியின்றி— அவர்களை 'அம்போ' என்று விமான வழியாகவும் தரை வழியாகவும் கப்பல் வழியாகவும் அகதிகளாக தமிழ்ஈழத்துக்கு அனுப்பிவைத்தவர் தான், இன்று தெற்கிலே தமிழர்களைக் குடியேற்றப் போகிருராம்! எதற்காக? மீண்டும் சிங்கள இனவெறிக்குத் தமிழர்களைப் பலிகொடுத்திடவா? என்று நாம் கேட்கிருேம்.

எனவே நண்பா, குடியேற்றம்என்ற பெயரில் நடைபெறவிருக்கும் ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் இந்தப்பயங்கர ஆக்கிரமிப்பு நடவடிக்கையை எதிர்த்து தமிழினம் போர்க்களத்திலிறங்கவேண்டிய நேரம் வந்துவிட்டது. வெறுமனே பாராளுமன்றப் பேச்சுக்களும், கண்டனத் தீர்மானங்களும், மகஜர்களும், பேட்டிகளும் தமிழினத்துக்கு ஏற்படவிருக்கும் ஆபத்தை தடுத்துநிறுத்தி விடாது என்பதை நமது தமிழர் விடுதலைக்கூட்டணித்தலைவர்கள் உணர்ந்து நேரடியான வெகுஜன ஒத்துழையாமை இயக்கங்களை—மக்கள் பங்குபற்றக் கூடிய பரந்த அடிப்படையிலான அஹிம்சை இயக்கங்களை தொடங்கவேண்டிய நேரம் வந்துவிட்டது. இதற்குப்பின்னரும் ஜே. ஆரை இன்னும் நம்புவோம்— இன்னும் பொறுத்திருப்போம் — என்று நமது தலைவர்கள் கூறுவார்களானல்— அவர்கள் மீது மக்களுக்கு ஐயம் எழுவதை தடுக்க யாராலும் முடியாது.

—உன் அன்புத் தோழன்

கோவை மகேசன்


## விற்பனைக்கு

தமிழ் ஈழத்துக்கு தமது வியாபாரத்தை மாற்ற விரும்பும் தென்னிலங்கை வர்த்தகர்களுக்கு அரிய வாய்ப்பு! உரும்பிராய் பட்டின சபைப் பிரதேசமான உரும்பிராய் பிரதான சந்தியில் மூன்று கடைகளுடன் கூடிய பார்வையுள்ள கடைக் கட்டிடம் தனித்தனியாகவோ கூட்டாகவோ விற்பனைக்குண்டு. உரும்பிராய் சந்தியில் வசிக்கும் (ஜோய்) தருமரத்தினத்துடன் தொடர்பு கொள்ளவும்.

விற்பனையாகிக்கொண்டிருக்கிறது

# சோதிட மலர்

புரட்டாதி இதழ்

இலங்கையில் ஒரே ஒரு சோதிட சஞ்சிகை

- ★ கூட்டணித் தலைவர் சிவாவின் எதிர்காலம் என்ன?
- ★ நவீன எண் சோதிடம்
- ★ நவீன கைரேகை சாஸ்திரம்.

இன்னும் வழமையான, ஆராவுமன்றம், இராசிப் பலன் உட்பட அநேக அம்சங்களுடன் 40 பக்கங்களுடன் பவனிவருகிறது. விலை ரூபா 1-50.

உங்கள் பிரதிக்கு முந்துங்கள்.

வெளியீடு;— திருக்கணித நிலையம், மட்டுவில், சாவகச்சேரி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்சிமன்ற பகிஷ்கரிப்புத்தான் உலகின் கவனத்தை நம்மீது திருப்பும்!

இளைஞர் கருத்து

இன்னலுக்கிடையில்— இடுக்கண் நடுவில் வாழும் ஈழத் தமிழர்களின் இயங்கும் ஏக விடுதலை ஸ்தாபனமான தமிழர் விடுதலைக் கூட்டணியினராகிய நாம், கடந்த பொதுத் தேர்தலில் தமிழ் ஈழம் அமைப்பதையே எமது மூதற்தர— மூலாதாரக் கோட்பாடாக முன் வைத்து மக்களின் அமோக ஆதரவைப் பெற்றிருக்கின்றோம். எமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் எம்மை எதிர்நோக்கியிருக்கின்ற ஏக கேள்வி விடுதலையா? அடிமைத்தனமா? என வினவியிருந்தோம். ''எமக்கு வேண்டியது விடுதலைதான்! விரசுதந்திரம் வேண்டி நின்றூர் வேறொன்று கொள்ளமாட்டார்'' என்பதே பலத்த குரலில் தமிழ் மக்கள் எமக்களித்த பதிலாகும்.

''.........எனவே எதிர்வரும் பொதுத் தேர்தலில் இந்நாட்டில் தமிழ்ப் பேசும் மக்கள் பாரம்பரியமாக வாழும் தொடர்பான பிரதேசம் முழுவதையும் உள்ளடக்கியதான ஓர் சுதந்திர— இறைமையுள்ள—மத சார்பற்ற—சமதர்ம தமிழீழ அரசை நிறுவுவதற்கு தமிழ்த் தேசிய இனத்தின் கட்டளையை தமிழர் விடுதலைக் கூட்டணி நாடி நிற்கிறது'' என தேர்தல் விஞ்ஞாபனத்தில் இன்னேர் இடத்தில் எடுத்துக் காட்டியிருந்தோம்.

கேட்டது கிடைத்தது. தமிழ் மக்கள் அழுத்தம் திருத்தமாக— ஆணித்தரமாக எங்கள் தலைவர்களாகிய உங்களுக்கு அமோக வெற்றிகளைத் தந்து தங்களது ஆணையை அளித்திருந்தார்கள். அந்த மக்கள் எங்கள் எஜமானர்கள் அமையவுள்ள தமிழ் ஈழத்தில் இறைமையுள்ளவர்களாக வாழ இருக்கின்ற பெருமக்கள். அவர்களின் பணிப்பை ஏற்று பலவித முனைப்புக்களில் இறங்கி, வருகின்ற எந்தவொரு வாய்ப்பையும் நழுவவிடாது பயன்படுத்தி ஒல்லும் வழிகளில் எல்லாம் உழைத்து, தமிழ் ஈழத்தை அமைக்கவேண்டிய கடப்பாடு தலைவர்களாகிய உங்களுக்கும், தொண்டர்களாகிய எங்களுக்கும் உண்டு.

ஆணையேற்று அதனை நிறைவேற்ற வழிவகைகளை நாம் நாடி நிற்கின்ற வேளையில் ஆனை குறுக்கிட்டிருக்கின்றது-எம்மை—எம்மினத்தை அழித்தொழிக்கும் எத்தனங்கள்—பிரயத்தனங்கள் தொடர்கின்றன. இந்நிலையில் எம் செயலாவது யாது?

72இல் குடியரசு யாப்பு நிறைவேற்றப்பட்ட வேளையில், நாம் கூட்டணியை ஆரம்பித்தோம். தமிழ் ஈழம் அமைப்பதற்கு மக்கள் அங்கீகாரம் பெறுதிருந்தும் அந்த அடிமை யாப்பை எதிர்த்தோம்— எரித்தோம்— அதனை எதிர்க்க எத்தனையோ களங்கள் அமைத்தோம். இன்று.........? அந்த யாப்பில் இல்லாத அற்ப சலுகைகளும் சொற்ப சகாயங்களும் இந்த யாப்பில் இருப்பதென்னவோ உண்மைதான். எனினும் இந்த யாப்பிலும் நாம் இரண்டாந்தரப் பிரஜை தான்— ஈனப் பிறவிகள் தாம். இதனை எதிர்க்க இருக்கிறது மக்கள் ஆணை(Mandate) இனவிடுதலைக்காக நீங்கள் நாடாத்தும் (அறப்) போராட்டங்களில் பங்கெடுக்க மக்கள் சேனையும் இருக்கவே இருக்கிறது.

72இலும் தேசியப் பேரவைக்கு நீங்கள் சென்றதை நாங்கள் எதிர்த்தோம். ஆர்த்தெழுந்த எங்களை விளக்கங்கள் தந்து ஆசுவாசப் படுத்தினீர்கள். ஆட்சிமன்றம்போக வேண்டியதன் அவசியங்களை உள்ளடக்கி நீங்கள் அளித்த விளக்கங்கள்.

(1) ஆட்சிமன்ற ஆசனங்களை துரோகிகள் அலங்கரிப்பதை தடுத்தல்

(2) உலக அரங்கிற்கு எங்கள் பிரச்சினையை இட்டு வருவதற்குரிய ஏதுக்களை ஏற்படுத்தல்.

இன்று கிணற்று நீரை வெள்ளம் கொண்டுபோய் விட முடியாது. தேசிய அரசுப் பேரவையில் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு இருக்கின்ற பதினேழு ஆசனங்கள் புதிய அரசியல் யாப்பினுல் உத்தரவாதப் படுத்தப்பட்டு, பத்திரப்படுத்தப்பட்ட ஒரு விடயம். அந்த ஆசனங்கள் துரோகிகளால் ஒரு போதும் அலங்கோலப் படுத்தப்பட (அலங்கரிக்கப் பட?) முடியாதவை.

உலக அரங்கிற்கு எங்கள் பிரச்சினை கொண்டுவரப் பட வேண்டுமானுல்— பல நாட்டுப் பத்திரிகைகளினுல், தமிழ் ஈழப் பிரச்சினை பத்தி பத்தியாக எழுதப்படவேண்டுமானுல், நீங்கள் செய்ய வேண்டியது ஆட்சிமன்ற நடவடிக்கைகளில் பங்கெடுப்பதல்ல— அவற்றைப் பகிஷ்கரிப்பதே!

மூன்று மாதங்களில் உங்கள் பதவிகள் வெற்றும் வெறிதுமாகின்றபோதுமீண்டும் மீண்டும் நீங்களேதேர்ந்தெடுக்கப்பட வழிகளும்— வாய்ப்புக்களும் இந்த அரசியல் யாப்பினில் உண்டென்பதையும் உங்கட்கு நினைவூட்டுகின்றோம்.

புதிய அரசியலமைப்பு வருமட்டும் பொறுத்திருப்போம் என்று கூட்டணித்தலைவர்கள் கூறினுர்கள். அப்படியே பொறுத்திருந்தோம். இன்று புதிய அரசியலமைப்பும் வந்து விட்டது: அது தமிழ் தேசிய இனத்தின் எதிர்பார்ப்புக்களை மிகக்குறைந்த அளவிலேனும் ஈடு செய்யத் தவறிவிட்டது. இந்நிலையில் இனியும் தொடர்ந்து சிறிலங்காவின் தேசியப் பேரவைக்கு கூட்டணி பா. உக்கள் போகத்தான் வேண்டுமா? பேரவையை பகிஷ்கரித்து வெளியேறி வெளியே விடுதலைப் போராட்டத்தை நடத்தினுல் என்ன என்று தமிழ் இளைஞர்களில் ஒரு பிரிவினர் சிந்திக்கிறுர்கள்.

அந்த சிந்தனையின் விளைவாக வல்வெட்டித்துறை தமிழ் இளைஞர் பேரவையினர் அண்மையில் வெளியிட்டிருக்கும் துண்டுப் பிரசுரமொன்றில் காணப்பட்ட சில கருத்துக்களை இங்கு அப்படியே தருகிறோம். இளைஞர்களின் இக்கருத்து சரியானதுதானு அல்லது தவறு என்பது குறித்து நமது கருத்தை இங்கு நாம் குறிப்பிட வில்லை; ஆயினும் இன்றைய இளைஞர்களே நாளைய தலைவர்கள். அந்த அடிப்படையில் அவர்களது சிந்தனைப் போக்குக்கு எடுத்துக் காட்டாகவே இதை இங்கு வெளியிடுகிறோம்.

—ஆ-ர்,

# அகதிகளாகப் புகலிடம் தேடி வட கிழக்கு நோக்கி ஓடிவந்த இந்திய வம்சாவளித் தமிழர்களை இலங்கை அரசு புறக்கணித்தது!

1977 இனக்கலவரம் நடைபெற்றுக்கொண்டிருந்த நேரத்தில், அக்கலவரத்தினுல் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்காக ஒரு குழு அமைந்தது. கொழும்பு அகதி முகாம்களில் பாதிக்கப்பட்டவர்கள் இருந்த போது, அவர்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்வதற்கு மேலும் உதவிகள் தேவையென்ற கோரிக்கை விடப்பட்டது. இதன் பயனுக 1977 செப்டம்பர் 18ம் திகதி தமிழ் அகதிகள் மறுவாழ்வுக்கழகம் நிறுவப்பட்டது. வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள பாதுகாப்பான இடங்களுக்குசென்று தமது மறுவாழ்வை அமைத்துக்கொள்ள விரும்பிய தமிழ் அகதிகளுக்கு உதவும் பொருட்டே இந்த நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது. இது இலாபத்தை ஈட்ட விரும்பாத ஒரு தர்ம நிறுவனமாகும்.

ஏறத்தாழ 20,000 குடும்பங்கள் கலவரத்தினுல் நேரடியாகப் பாதிப்புக்குள்ளானுர்கள். இந்த 20,000 குடும்பங்களை விட 4.5 மடங்கினர் பாதுகாப்பற்ற நிலையிலும் ஆபத்துக்கு மத்தியிலும் இருந்தனர் இவர்களில் 2500 குடும்பங்கள் இந்திய வம்சாவளியினராவர்.

இவர்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள முகாம்களுக்கு அனுப்பப்பட்டனர்.

வீடிழந்த நிலையிலும், முன்பு வாழ்ந்த இடங்களில் தொடர்ந்து வாழ முடியாத நிலையிலும் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வந்து சேர்ந்த இந்த 2500 குடும்பங்களுக்கும் மறுவாழ்வு அமைத்துக் கொடுப்பதே எமது பிரதம பணியாகும்.

பாதிக்கப்பட்ட இலங்கைத் தமிழர்களிடமிருந்தும் உதவிகோரி எமக்கு வேண்டுகோள்விடப்பட்டதாயினும், அவர்களுக்கு வடக்கு கிழக்கில் சொந்த வீடோ, அல்லது உறவினர்களோ இருந்ததால், அவர்களுக்கு நாம் எந்த உதவியும் செய்ய முன்வரவில்லை.

அரசாங்கம் யாழ்ப்பாண மாவட்டத்தில் 200 குடும்பங்களையும், மன்னர்மாவட்டத்தில் 100 குடும்பங்களையும் குடியேற்றியது. ஏனைய 2000 குடும்பங்களையும்பாதுகாக்க வேண்டியது தொண்டர் இயக்கங்களின் பொறுப்பாக அமைந்தது.

எந்த ஒரு அரசும் செய்ய வேண்டிய கடமையை, வடக்கு கிழக்கு மாகாணங்களில் தஞ்சமடைந்த சகல இந்தியவம்சாவளி அகதிகளுக்கும் உதவி செய்ய இலங்கை அரசு முன்வந்திருந்தால், தொண்டர் இயக்கங்களுக்கு அவசியமே ஏற்பட்டிராது. ஆனல் அரசாங்கத்தின் நோக்கமோ, பழைய இடங்களுக்கு இந்த அகதிகளை செல்லுமாறு நிர்ப்பந்திப்பதாகவே அமைந்திருந்தது. உண்மையில் அவ்வாறு தமது பழைய இடங்களுக்கு சென்ற சிலரும் அங்கு வாழ முடியாது திரும்பியே வந்தார்கள். இந்தநாட்டின் ஒரு பகுதிமக்களாக உதவியற்ற இந்த இந்தியவம்சாவளித் தமிழர்களை இலங்கை அரசு கணித்துக் கொண்டதாகத் தெரியவில்லை.

அகதிகள் மறுவாழ்வுப் பணியில் அரசு போதிய உதவியோ அக்கறையோ காட்ட மறுத்ததால், நாமே இந்தப்பணியை மேற்கொள்ள வேண்டியதாயிற்று.

கலவரத்தின் போதும் அதற்குப் பின்னரும் கிறித்தவ தேவாலயங்கள் அகதிகளுக்கு ஆற்றிவரும் பணி [illegible] வேண்டியது. இப்போது வடக்கு, கிழக்குமாகாணங்களிலுள்ள அகதிகளுக்கு கிறிஸ்தவ தேவாலயங்களே உதவியளிக்கின்றன. கிறிஸ்தவ தேசியசபை திருகோணமலையில் எரிக்கப்பட்ட வீடுகளை மீண்டும் கட்டிக்கொடுத்து வருகிறது. வவுனியாவிலும் அப்படியே கட்டிக்கொடுக்க அது பொறுப்பேற்றுக் கொண்டுள்ளது. அத்துடன் நெடுங்கேணியிலும 100 குடும்பங்களை குடியமர்த்த அது உதவிபுரிந்துவருகிறது.

கிறிஸ்தவ தேசிய சபை பொறுப்பேற்று நடத்தும் குடியேற்றத்திட்டங்களை நாமேநேரடியாகநிர்வகித்து வருகிறோம். சிவபுரம், கண்ணுட்டி, செட்டிகுளம், றூகம்(மட்டக்களப்பு) ஆகிய இடங்களில் அமைந்துள்ள குடியேற்றத் திட்டங்களுக்கு நிதி உதவி புரிந்துள்ளோம்.

வவுனியா, செட்டிகுளப் பகுதியில் குடியேற்றத்துக்கு உதவக்கூடியவர்களை நாம் தேடிக்கொண்டிருக்கிறோம். திருகோணமலை மாவட்டத்தில் குடியேறியுள்ள சில குடும்பங்களுக்கும் நாம் உதவி செய்து வருகிறோம்.

அமெரிக்கா, சிங்கப்பூர், அவுஸ்திரேலியா ஆகியநாடுகளிலுள்ள சில குழுவினர், சிலகுடும்பங்களைப்பொறுப்பெடுத்து குடியமர்த்துவதற்கு ஆயத்தமாக உள்ளனர். மட்டக்களப்பிலுள்ள கைத்தறி நெசவுத்திட்டமொன்றில் வேலை செய்யும் அகதிகளுக்காக குடிசைகள் அமைத்திட உதவி செய்துள்ளோம்.

நிரந்தரமான வாழ்வை அமைத்துக்கொள்வதற்கு இன்னும் 1500 குடும்பங்களுக்கு மேலும் உதவி தேவைப்படுகிறது.

30 யூன் 1978 வரை எமக்குக் கிடைத்த நிதி ரூபா 911,000/- இதில் ரூபா 608,000/- செலவு செய்துள்ளோம். எமது நிறுவனத்தின் கணக்குவழக்குகள் சாம்பமூர்த்தி அன் கொம்பனியால் தணிக்கை செய்யப்படுகிறது.

—இவ்வாறு தமிழ் அகதிகள் மறுவாழ்வுக் கழகத்தின் ஆண்டு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 2000 குடும்பங்களுக்கு நாம் வாழ்வளித்தோம்

தமிழ் அகதிகள் மறுவாழ்வுக் கழகம் அறிக்கை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீண்டாமையொழிப்பு, குடியேற்றம் இரண்டுமே விடுதலையின் அடிப்படை

## கட்டுப்பாடற்ற தியாகத்தினுல் பயன் ஏற்படாது!
## இளைஞர்களுக்கு அமரர் வன்னியனுர் புத்திமதி!

**"எங்கள் இனத்தின் இறைமைக்கும் சுதந்தரத்திற்கும் நாங்கள் போராடுகிருேம்; இது மிகவும் வில்லங்கமான காரியந்தான்; என்ருலும் சிங்கள இனத்தினுல் விழுங்கப்பட்டுவிடாமல் தடுப்பதற்கு இந்தப் பாதையிற் செல்வதைத் தவிர எங்களுக்கு வேறு வழியில்லை" என திட்டவட்டமாகத் தந்தை செல்வா தேசிய பேரவையில் உலகறிய அறிவித்தபின்னரும் இயக்கத் தலைவர்கள் சிங்கள ஆட்சியாளரின் சூப்பிய எலும்புச் சிராய்களுக்கு ஏங்குவதேன்?**

"இலங்கைத்தீவின் தேசிய இனங்கள் தாம் ஒரே நாட்டாரென்பதற்கோ— தாயகமென்ற பாச உணர்வு வளர்வதற்கோ— சகோதரரென்ற எண்ணத்திற்கோ— அன்னியபடை எடுப்புக்கு இந்நாடு இரையாகும்போது தோளோடு தோள் சேர்ந்து எதிர்ப்பதற்கோ— முற்றுப் புள்ளி வைத்த வரலாற்று நாயகன் யூனியஸ் றிச்சர்ட் ஜயவர்த்தனு என்பதை ஆணித்தரமாக அறுதியிட்டுரைக்கின்றேன். 1943ல் இடைத்தேர்தல் ஒன்றன் மூலம் தமிழ் பேசும் மக்களுடைய வாக்குகளை அமோகமாகப் பெற்று சட்டசபை சென்றதும் அவர் முதல் முதலாக வைத்த தீ களனி மகாநாட்டில் "சிங்களம் மட்டு" மென்ற தீர்மானத்தை நிறைவேற்றிச் சட்டசபையிலும் நிறைவேற வைத்ததாகும். இத்திருப்பணியை முன்மொழிந்த அவர் திருவாய் வாழ்க; பண்டா செல்வா ஒப்பந்தத்தை எதிர்த்துக் கண்டிக்குப் பாதயாத்திரை செய்த அவரது திருப்பாதம் வாழ்க; மாவட்ட சபைக்குக் குழி தோண்டிய அவர் திருக்கரம் வாழ்க; போர் என்ருல் போர், சமாதானமென்ருல் சமாதானம் என வானொலியை அலற வைத்து அடைல இலங்கையிலும் வகுப்பு வெறி பரவச்செய்த அவரது இன வெறி இதயம் வாழ்க;

தமிழினத்துக்கென ஒரு தனித்தேசம் இல்லாமற் செய்வதற்காக தமிழ் பிரதேசத்தில் சிங்களவரைக் குடியேற்றும் அவரது இன சங்கார வெறி வாழ்க;

வட்டமேசை மகாநாட்டின் மூலம் தமிழர் பிரச்சினை தீர்ப்பேனெனத் தேர்தல் குண்டைக்காட்டி, தேர்தலில் தமிழர் வாக்குகளை அமோகமாகப் பெற்று— அதிகாரத்தைப் பிடித்து— ஆட்சிப்பட்டமேறிபிரதமராகி —பின் மாண்புமிகுஜனதிபதியாகி— இருக்குமிடத்தில் இருந்து கொண்டு தமிழரைப் பார்த்து "கெருடா சௌக்கியமா" என்கிருர். கெருடன் நிழல் பட்டாலே தன் நிலை என்ன என்பதை உணரத்தெரியாத பாம்பு சுகம்விசாரிக்கிறது. தலைவர்கள் நல்லபாம்பு என்கிருர்கள்.

கொடும் போரொன்றுக்குத் தயாராகும் படைத்தளபதிகள் தமது படை வீரர்களிடம் பூரண நம்பிக்கை வைத்துப்பயிற்சி அளிப்பதாலும் தேவையான வீரர்களைப் படையிற் சேர்த்துப் படையை அரண் செய்து மெய்வருத்தம் பாராது— பசிநோக்காது— கண்துஞ்சாது— எவர் தீமையிலும் கருத்துச் செலுத்தாது— காலமறிந்து—இடமறிந்து— செய்வினையின் மூலமறிந்து செயற்பட்டு நினைத்ததை முடிப்பர். படைகளின் வீரத்தில் நம்பிக்கை இழந்த வைராக்கியமற்ற தளபதிகள் வேற்று வேந்தர் படை உதவிப்படை வரும். உதவி பெறுவர். உதவிப் படை மூலப்படை மீது அதிகாரத்தைச் செலுத்தும். மூலப்படை வீரர் மனங்குளம்பிய நிலையிலுள்ள போது மூன்றும் படையொன்றையும் தளபதிகள் வரவேற்க இறுதியில் மூலப்படை முழு முளைத்தாக்கு தலை எதிர்நோக்க வேண்டிய சூழ்நிலைகளும் நாடுகளிலேற்பட்ட வரலாறுகளை நினைவுறுத்துவோம்.

> ★ வானுலகில் வன்னியர் விழா—
> ★ ஒரு கற்பனைச்சித்திரம்
> அளிப்பவர்:
> **வித்துவான் வ.கந்தையா**

தேசிய இனமொன்று தானழிந்து போகாது காக்கப்பட வேண்டுமேயானுல் இனத்தின் பிரதேசமும், மொழியும் இரு கண்களாகக் கருதப்பட வேண்டும். இனத்தின் ஆயுதம் பறிபோனுல் மொழி தானுகவே அழிந்து படும். எமது இனத்தின் பிரதேசம் சிங்களக் குடியேற்றத்தினுல் பயங்கரமான முறையில் பறிபோய்க் கொண்டிருக்கிறது. இன்று எமது இயக்கம் இரண்டே இரண்டு திட்டங்களில்— குடியேற்றம்— தீண்டாமை ஒழிப்பு— என்பனவற்றைத் திட்டமிட்டுச் செயலாற்றுவிடின் இனம் அழிந்தொழிவதை எவராலும் தடுத்து விட முடியாது.

இந்த இருவிடயங்களிலும் பூரண கவனஞ்செலுத்தப்பட்டுச் செயற்படுத்தப்படுமேயானுல் தனிநாட்டின் அத்திவாரந்தானுகவே அமையும். இவ்விருதிட்டங்களும் சாமானியமானவையல்ல. ஒவ்வோர் தொகுதியிலும் பாராளுமன்ற உறுப்பினர் தலைமையில் தொகுதித் தலைவர்களுந்தொண்டர்களும் வீடுகள் தோறும் சென்று மக்களுடன் கலந்துரையாடும் பாதயாத்திரை ஒன்றன் மூலமே இதற்குத் தீர்வேற்படும். இந்தப்பாதயாத்திரை தலைவர்களது அந்தராத்மாவில் அரும்பெரும் விடயங்களை அறிவுறுத்தும்.

விடுதலைக்காக வளர்க்கப்பட்ட இயக்கம்இன்று பாராளுமன்ற இயக்கமாக—பதவி இயக்கமாக— சலுகைக்கும் வேலை வாய்ப்புக்களுக்கும் கையேந்தும் இயக்கமாகத் திசை திருப்பப்பட்டுள்ளது. இயக்கத்தினுள்ளே பதவி மோகிகள், புகழ்விரும்பிகள், பிரபுத்துவாதிகள், சுயநலமிகள், போகபாக்கிய புண்ணியவான்கள் நிரம்பியுள்ளனர். மொட்டுமாலைகள், ஆலாத்திகள், அன்னபூசை வரவேற்புகள் மூலம் தலைவர்களைக் குளிருட்டி வைத்துக் காரியம் நிறைவேற்றிக் காலம் போக்கும் கனபாடிகளின் குறுக்கீடுகளைத் தாண்டித் தலைவர்கள் குடியேற்றத் திட்டத்தையும் தீண்டாமை ஒழிப்பையும் நடைமுறையாக்கித் தனிநாடு காண்பதென்பது இறைவா உன் திருவருளே.

மார்தட்டிக்களம்புகும் வீர இளைஞர் சமுதாயமே! தமிழ் பேசும் தேசிய இனத்தின் விடுதலைச்சிற்பிகளே! எங்கள் கண்ணீரால் உங்களைத் தூய்மைப்படுத்துகிருேம். உங்களை ஆசீர்வதிக்கிருேம். உங்கள்தியாகத்தில் உறுதியான நம்பிக்கைவைக்கிருேம். பயங்கரமான எதிர்காலம் உங்களை வரவேற்கத் தயாராகவுள்ளது. "ஈழம் வாழ் தமிழ் பேசும் தேசிய இனம் அகில உலகும் போற்றச் சுதந்தரக் கொடியை வானளாவப் பறக்கவிட்டுத்தன் வீரத்தை நிலைநாட்டியது" என்ற அழியாத புகழையோ அல்லது ஈழத்துத் தமிழ் பேசும் தேசிய இனம் அழிந்தொழிந்ததென்ற அழியாத வசையினையோ வரலாறு தாங்க வேண்டிய இக்கட்டான காலமொன்றை நீங்கள் சந்திக்கப் போகிறீர்கள் என்பதை உங்களுக்கு அறிவுறுத்துகிருேம்.

கட்டுப்பாடற்ற தியாகம் தேசிய இனத்தை வேரோடு சாய்த்துவிடும். பொறுமையும், விட்டுக்கொடுக்கும் திண்மையும், அமரர் அண்ணு மந்திரமாய எதையுந் தாங்கும் இதயத்தையும் ஆயுதமாக்குங்கள். பிளவுபடாது, கட்டுப்பாடாக, லட்சிய வீரர் கூட்டமாக— விடுதலை ஒன்றினையே குறிக்கோளாகக் கொண்டு திட்டமிட்டு இயங்குமாறு உங்களை ஆசீர்வதிக்கிருேம். என்னுல் வளர்க்கப்பட்ட தொண்டர்கள் ஆங்காங்கு இதய வேதனையோடு— இரத்தக் கண்ணீர் சிந்தியவாறு இருக்கிருர்கள். திட்டமிட்டு நீங்கள் இயங்கத் தொடங்கினுல் அவர்கள் உங்களைத் தேடி வந்து அரண் செய்வார்கள். அவர்களின் பின்னணியில் திறமை வாய்ந்த அரசியல் சாணக்கியர் பலர் இருக்கிருர்கள். நீங்கள் கட்டுப்பாடாகத் திட்டமிட்டு இயங்கினுல் அந்த அணிகளெல்லாம் உங்கள் இயக்கத்தை அரண் செய்யுமென்பதை உறுதியாக நம்பிச் செயற்படுங்கள்.

தமிழ் பேசும் தேசிய இனம் மயிரிழையிற் தொங்கிக் கொண்டிருக்கிறது. கிழக்கு மாகாண நெற்களஞ்சியங்கள் சிங்களத் தொகுதிகளாகி விட்டன; மூதூர்கள், செந்நெல் விளையுங் கழனிகள் சிங்களக் குடியேற்றத்துக்கு இரையாகின்றன; கடற்றொழிலால் வாழும் கரையோரத் தமிழ் பேசும் மக்களது நிலமும் தொழிலும் மீன்பிடி என்னும் பெயரால் சிங்களக் குடியேற்றங்களாகின்றன. நிர்க்கதியாக அகதிகளாக வந்தோரைப் புண்ணியவான்கள் சிலர் ஆறுதலளித்து குடியேற்றப் பகுதிகளிற் குடியமர்த்தி ஊனும் உடையும் குடிசையும் வசதி செய்து கொடுத்தார்கள்; அந்தப்புண்ணிய சீலர்களின் சந்ததி வாழ்க. இவற்றுக்குப் பொறுப்பான இயக்கத்தலைவர்கள் இன்ருவது அந்த அகதிகளைப் பார்த்து அவர்கள் துன்பந்துடைத்து ஆறுதலாவது கூற இனியாவது முன் வரட்டும். குடியேற்றப்பகுதிகளில் சிந்தப்படும் இரத்தக் கண்ணீர் வரப்போகும் ஈழத்திருநாட்டை அபிசேகஞ் செய்யட்டும்."

இவ்வாறு உணர்ச்சியுடன், அமரர் வன்னியனுர் தமது உரையை முடித்துக்கொள்கிருர். "தமிழ் ஈழம் வாழ்க" என்று பேரறிஞர் அண்ணுமும் முறை முழங்கிவிழாவை முடித்து வைக்கிருர். அமரர் பரமஹம்சதாசன் தாம் எழுதிய "வாழ்க ஈழத்தமிழகம்" எனும் தேசிய கீதத்தைத் தமது வாயினுலே பாட, விழா நிறைவுறுகிறது— திரை விழுகிறது.

## விஜய வீராவிடம் ஒரு கேள்வி

யாழ்ப்பாணம் முற்றவெளியில் 24-9-78 மாலை நடைபெற்ற கூட்டத்தில் தேசிய இனங்களுக்கு சுயநிர்ணய உரிமையை தாம் அங்கீகரிப்பதாக ஜே.வி.பி. தலைவர் ருேகன விஜயவீராவும் பிரிந்து செல்லக்கூடிய சுயநிர்ணய உரிமையை தாம் வழங்குவதாக ஜே.வி.பி. பொதுச்செயலாளர் திரு. சுமநாயக்காவும் கூறியதாக 25.9.78 ஈழநாடு பத்திரிகை அறிக்கை தெரிவிக்கிறது.

ஆனல், கொழும்பு பொரளை கம்பெல் மைதானத்தில் இதே விஜயவீரா பேசியதாக சொல்லப்படும் பேச்சு 24.9.78 நாளேடுகளில் (வீரகேசரி, சிந்தாமணி) வெளிவந்துள்ளது. அது வருமாறு:-

"ஈழம் தராவிட்டால் தாக்குதல் நடத்துவோம் என்று தமிழ் இளைஞர்கள் இன்று கூறுகிருர்கள். இந்த நிலையில் ஜே.ஆர். ஜெயவர்த்தன இராணுவத்தினரை வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு அனுப்பிவைப்பார். இராணுவத்தில் சேருமாறு சிங்கள இளைஞர்களை அழைப்பார். இராணுவத்தில்சேர்ந்துவடக்கே சென்று சுட்டுத்தள்ளுங்கள் அல்லது செத்துமடியுங்கள் என்று அனுப்பிவைப்பார். ஜே. ஆருக்குப் பின் சிறிமா ஆட்சிக்கு வரப்போவதில்லை. ஆனல் ஒருவேளை தப்பித் தவறி வந்தாலும் வடக்கில சண்டைபிடிப்பதற்கு தமது மகன் அனுராவை அனுப்பப்போவதில்லை; சிங்கள இளைஞர்களே சண்டையிட்டுச்சாகவேண்டும்"

இவ்வாறு விஜயவீரா பேசியதாக பத்திரிகை செய்தி தெரிவிக்கிறது.

பிரிந்து செல்லும் உரிமையுடன் கூடிய சுயநிர்ணய உரிமையை— அதாவது தமிழர்களின் தனி ஈழக்கோரிக்கையை— திரு விஜயவீரா ஏற்றுக்கொள்ளுபவராக இருந்தால், கொழும்புக்கூட்டத்தில் சிங்கள இளைஞர்களுக்கு அவர் என்ன கூறியிருக்க வேண்டும்?

"சிங்கள இளைஞர்களே! தமிழ் இளைஞர்களின் தமிழ் ஈழக்கோரிக்கை முற்றிலும் நீதியானது; நியாயமானது; அதற்கு எதிராகப் போராடுவதற்கு முன் வரும்படி உங்களை ஜே.ஆர். அழைத்தாலும் சரி, சிறிமா அழைத்தாலும் சரி, அந்த அழைப்பை ஏற்றுக் கொள்ளாதீர்கள், தமிழ் சகோதரர்களுக்கு எதிராக ஆயுதமேந்த சம்மதிக்காதீர்கள், அவர்களது விடுதலைப் போராட்டத்துக்கு உங்களது ஆதரவைத் தாருங்கள், தமிழீழம் விடுதலை பெற உங்கள் உதவியை நல்குங்கள்!"

என்றன்ருே கூறியிருக்க வேண்டும்? அப்படிக் கூறினரா விஜயவீரா? இல்லையே!

இங்கொரு பேச்சும், அங்கொரு பேச்சும் ஏன்? தமிழ் மக்களால் ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களைத் திட்டித் தீர்த்துக் கொண்டு தமிழ் மக்களிடையே ஊடுருவ முடியாதென்பதை ஜே.வி.பி. யினர் உணரட்டும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

—1-ம் பக்கத் தொடர்

மிகள் இருபுகைக்குண்டுகளை வெடிக்கவைத்து கூட்டத்தில் சிறு சலசலப்பை ஏற்படுத்திய போதிலும், லண்டன் பொலிசார் தலையிட்டு உடனடியாக அமைதியை நிலைநாட்டினர். அதன்பின் திரு.அமிர்தலிங்கம் இரண்டு மணித்தியாலங்கள் உணர்ச்சி மயமாக உரை நிகழ்த்தினார். அவரைத் தொடர்ந்து திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம். திரு. வி. என். நவரத்தினம் பா.உ. ஆகியோரும் உரை நிகழ்த்தினர். இக்கூட்டத்தை சீமைத் தமிழ் இளைஞர் முன்னணி ஏற்பாடு செய்திருந்தது.

திரு.அமிர்தலிங்கம் தமது உரையில், சகல தமிழர்களும தமிழ் ஈழத்தின் விடுதலைக்காக உழைக்கவேண்டுமென்றும், நாம் கோருவது பிரிவினையோ அல்லது புதிய அரசோ அல்ல வென்றும், வெள்ளைக்காரன் சிங்கள, தமிழ் தேசங்களை ஒன்றாக இணைப்பதற்கு முன்னர் இருந்து வந்த எங்கள் சொந்த அரசையே நாம் கோருவதாகவும் குறிப்பிட்டார்.

தமிழ் ஈழத்தின் இறைமையை மீட்பதற்கு தமிழர் விடுதலைக்கூட்டணிக்கு தெட்டத் தெளிவான மக்கள் ஆணையிருக்கிறதென்று கூறிய திரு. அமிர்தலிங்கம் 1977ம் ஆண்டு ஆகஸ்டில் நடைபெற்ற இனக்கொலை நிகழ்ச்சிகளையும் உருக்கமாக எடுத்து விளக்கினார். தமிழ் மக்களின் பொருளாதாரம் எப்படி சீரழிக்கப்பட்டது என்பதையும் அவர் எடுத்து விளக்கினார். தமிழ் ஈழத்தில் நடைபெற்றுவரும் சிங்களக் குடியேற்றம் உடனடியாகத் தடுத்து நிறுத்தப்படவேண்டுமென்று வற்புறுத்திய அமிர், தமிழ் அகதிகளை தமிழ்க்கிராமங்களில் குடியமர்த்துவதற்கு பிரிட்டனிலுள்ள தமிழ் மக்கள் நிதி உதவ வேண்டும் என்றார்.

வயிறுமுட்டச் சாப்பிட்டுவிட்டு வசதியாக இருந்துகொண்டு டெலிவிசன்படம் பார்க்கும் சிலரே கூட்டணி எதுவும் செய்யவில்லையென்று குறை கூறித்திரிகிறார்கள் என்று திரு. அமிர்தலிங்கம்கண்டித்தார்.

லண்டனிலுள்ள தமிழர் முன்னேற்றக்கழகம் எடுத்த பெரியார் நூற்றாண்டு விழா விலும்கலந்துகொண்டு திரு. அமிர்தலிங்கம் உரையாற்றினார். கார்டியன், லண்டன் டைம்ஸ் ஆகிய பத்திரிகைகளின் நிருபர்களுக்கும் லண்டன் பி.பி.சிக்கும் திரு. அமிர்தலிங்கம் பேட்டியளித்தார்.

ஒக்ஸ்போர்ட்டுக்கு சென்று வெளிநாட்டு உதவிகளுக்குப் பொறுப்பான டைரக்டர் திரு.எம். ஹரிஸ் அவர்களைச் சந்தித்த திரு. அமிர்தலிங்கம் தமிழ் அகதிகள் புனர் வாழ்வுக்கு உதவியளிக்க வேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டுக்கொண்டார். (முன்பக்கத்திலுள்ள படத்தில் திரு. அமிர்தலிங்கம், திரு. ஹரிஸ் அவர்களைச் சந்தித்துப்பேசுவதையும், அருகே திருமதி அமிர்தலிங்கத்தையும் காணலாம்.)

## சுதந்திரன் சந்தா

| | |
|---|---|
| ஓராண்டு சந்தா | ரூபா 50-00 |
| அரையாண்டு ,, | ரூபா 25-00 |

## த. வி. கூ. தலைமைப்பணியக வாராந்தக் கருத்தரங்கு

காலம்; 30-9-78 சனிக்கிழமை மாலை 6-00 மணிக்கு

தலைப்பு— "தமிழ் ஈழத்தில் சிங்களக்குடியேற்றம் சர்வதேச சட்டமுறையானது தானா?

பேசுபவர்— பிரபல சட்டத்தரணி

## யாழ்ப்பாணத்தில்..

—1-ம் பக்கத் தொடர்

செந்தமிழர் இயக்கசெயலாளர் வி. பொன்னம்பலம், எஸ். சி. தியாகராசா, சட்டத்தரணி விசுவநாதன், ஆசிரியர் அழகையா, மு. ஆலாலசுந்தரம் உட்பட தமிழ் இளைஞர் பேரவை, மகளிர் பேரவைஉறுப்பினர்களும் உரையாற்றுவர்.

விடுதலைப் போராட்டம் பற்றிய இலவச படக்காட்சியும் காண்பிக்கப்படும்.


## மில்க்வைற் தொழிலகம்

வர்த்தகப் பெருமக்களுக்கு ஒரு பணிவான வேண்டுகோள்,

தயவு செய்து எங்கள் தயாரிப்புக்களை உரிய மேலுறைகளோடு விற்பனை செய்து ஆதரவு நல்குங்கள்.

- தொழிலதிபர்

## செல்லமகால்

4-வது வாரம்

ஜெமினி கணேசன், தேவிகா, முத்துராமன், ரங்கராவ் நடித்த -

வாழ்க்கைப் படகு

(புத்தம் புதிய கொப்பி)

இப்போது காண்பிக்கப்படுகிறது

## ரெயிட்டி [கொட்டாஞ்சேனை]

ஜெமினி, முத்துராமன், விஜயகுமாரி - நடித்த -

அவரே என் தெய்வம்

எதிர்பாருங்கள்:

எம்.ஜி.ஆர். நடித்த-

மர்மயோகி

## கிங்ஸ்லி

(கொழும்பு)

என். டி. ராமராவ், பி. கண்ணம்பா, ராஜசுலோசனா, ரங்கராவ் நடித்த-

ராஜ மகுடம்

[புதிய பிரதி]

## கெப்பிட்டல்

4-வது வாரம்

சிவாஜி சாவித்திரி நடித்த —

காத்தவராயன்

(புதிய பிரதி)

## விஜயா (மட்டுநகர்)

கடைசி வாரம்

சிவாஜி நடித்த-—

உத்தமன்

— கலர் —

## லிடோ (யாழ்நகர்)

சிவகுமார், ஜெயசித்ரா, கமலஹாசன் — நடித்த —

தேன் சிந்துதே வானம்

(புதிய கொப்பி)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் மகாத்மா காந்தி வீதி 15ம் இலக்கத்திலுள்ள சுதந்திரன் அச்சகத்தில் 1978 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 1ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.